REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper
மின்னிதழ்
2024 ஜுன் 15 சனிக்கிழமை
தினகரன்
THINAKARAN
92
1932–2024 ANNIVERSARY
வரு. 92 இல. 142 | Saturday 15, June, 2024 | 12பக்கங்கள் | 50/-

## SLFP தலைவராக செயற்பாடு

# அமைச்சர் விஜேயதாசவுக்கு விடுத்த தடையுத்தரவு நீடிப்பு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக நீதி அமைச்சர் விஜேய தாச ராஜபக்ச செயற்படுவதை இடைநிறுத்தி விடுக்கப்பட்ட இடைக் கால தடை உத்தரவை 06

# நாட்டின் பொருளாதாரத்தின் மீது மக்களும் சர்வதேசமும் நம்பிக்கை

## நாட்டை பலவீனப்படுத்த வேண்டாம்: எதிர்க்கட்சிகளிடம் செஹான் சேமசிங்க வேண்டுகோள்



பொருளாதாரத்தின் மீது சர்வதேசமும் நாட்டு மக்களும் நம்பிக்கை கொண்டுள்ளதால், நாட்டை பலவீனப் படுத்தும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதை எதிர்க்கட்சியினர் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் வழங்கிய அனுமதி தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார். 06

## கிராம உத்தியோகத்தர்களின்

# புதிய சேவை யாப்புக்கு அரசாங்க சேவை ஆணைக்குழு அங்கீகாரம்

## உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக்க பிரியந்த



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பின்னர் கிராம உத்தியோகத்தர்களின் புதிய சேவை யாப்பு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக்க பிரியந்த தெரிவித்தார்.

அவசியம் ஏற்படுமாயின் இந்த புதிய யாப்பில் திருத்தங்களை செய்வதற்கும் 06

## ஜனநாயக கட்டமைப்பில்

# இலங்கையில் தேர்தல் நடத்துவதில் பிரச்சினை இல்லை – IMF



ஜனநாயக கட்டமைப்பில் இலங்கையில் தேர்தலை நடத்துவதில் பிரச்சினை இல்லை என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தூதுக் குழுவின் தலைவர் பீட்டர் ப்ரூவர் (Peter Breuer) தெரிவிக்கையில், எந்தவொரு நாட்டிலும் தேர்தலை நடத்துவது ஒரு ஜனநாயக செயல்முறை. சர்வதேச நாணய நிதியம் அதை முழுமையாக மதித்து அந்த செயல்முறையை கடைப்பிடிக்கிறது என்றும் தெரிவித்தார்.

தேர்தல் என்று வரும்போது இலங்கை மக்கள் ஜனநாயக ரீதியில் செயற்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கைக்கான 06

## அனைத்து தமிழ் கட்சிகளுமே தவறவிட்ட பொன்னான சந்தர்ப்பம்

# 13ஐ நிராகரித்தமையே இன்றைய நிலைக்கு காரணம்

## அன்று EPDP மட்டுமே துணிந்து குரல் கொடுத்தது



நாட்டை முன்னேற்றம் காண செய்துகொண்டிருக்கும் ஜனாதிபதி ரணிலுக்கு இன்னும் சில காலம் சந்தர்ப்பம் வழங்குவது சிறந்தது.

"தமிழ் மக்களின் அரசியல் உரிமை பிரச்சினைக்கான தீர்வுக்கு 13ஆவது திருத்தம் உள்ளிட்ட பொன்னான வாய்ப்புகள் பல கிடைத்திருந்தன. அவ்வாறான சிறந்த சந்தர்ப்பங்களை எல்லாம் ஈழமக்கள் ஜனநாயக கட்சியாகிய எம்மை தவிர தமிழ் தரப்பிலிருந்த ஏனைய அனைவரும் நிராகரித்திருந்தனர். இதுவே தமிழ் மக்களின் இன்றைய சாபக்கேடான நிலைக்கு முக்கிய காரணம்" என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு நேற்று விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அம்மாவட்டத்தில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் தேவைப்பாடுகள் அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பாக துறைசார் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

இதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

"தமிழ் மக்கள், தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துபவன் என்ற வகையில் வடக்கு, கிழக்கை மையப்படுத்தியதாகவே எனது அன்றையகால உரிமைப் போராட்டமும் இருந்தது. இன்றைய பாராளுமன்ற அரசியல் செயற்பாடுகளும் இருந்து வருகின்றன.

அன்று தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுக்கொள்வதை மையமாக வைத்தே உரிமைப் 06

# புதிய பொருளாதார மாற்றத்துக்கு டிஜிட்டல் மயமாக்கல் அவசியம்

## இலங்கை இவ்விடயத்தில் முன்னேற வேண்டும் –ஜனாதிபதி



இலங்கை இளைஞர் சமூகத்துக்காக பொதுக் கற்றலுக்கான http://www.publiclearn.lk/ இணையத்தளத்தை உத்தியோகபூர்வமாக அறிமுகம் செய்யும் நிகழ்வு (13) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது. Public Learn என்பது உலகின் முன்னணி பல்கலைக்கழகங்களிலிருந்து இலவச பாடநெறிகளுக்கான 06



03
## அவுஸ்திரேலியா வீஸா விதிகளை கடுமையாக்குவதாக அறிவிப்பு

## கம்பன் விழா கோலாகலமாக ஆரம்பம்



அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழா 2024 கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் கோலாகலமாக நேற்று மாலை ஆரம்பமானது. இந்த விழாவுக்கு வருகை தந்த பிரமுகர்கள் கம்பன் தலைமை அலுவலக கோட்டத்திலிருந்து ஊர்வலமாக மங்கள வாத்தியங்கள் முழங்க அழைத்துச் செல்லப்படுவதை படத்தில் காணலாம்.

## தமிழ் பொது வேட்பாளர் தெரிவு

# தெற்கு பிரதான கட்சிகளின் தேர்தல் அறிக்கையை பார்த்த பின்பே முடிவு

**கோப்பாய் குறூப் நிருபர்**



தெற்கின் பிரதான கட்சிகளின் தேர்தல் அறிக்கையை பார்வையிட்ட பின்னரே தமிழ் பொது வேட்பாளர் விடயம் தொடர்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சி தீர்மானம் எடுக்குமென்றும் அதுவரை தீர்மானம் எதுவும் மேற்கொள்ளவில்லையெனவும் அக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். 06

## இலங்கையருக்கு முக்கிய தகவல்:

# தேசிய அடையாள அட்டையில் ஏற்படவுள்ள மாற்றம்



இலங்கையர் ஒவ்வொருவரினதும் உயிரியளவுகள் எனக் கூறப்படும் (Biometrics மனித குணாதிசயங்கள் தொடர்பான உடல் அளவீடுகள் மற்றும் கணக்கீடுகள்) தரவுகளுடன் கூடிய புதிய இலத்திரனியல் அடையாள அட்டை இந்த ஆண்டு இறுதிக்குள் அறிமுகப்படுத்தப்படுமென ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது. முதன் முறையாக அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் நபர்களுக்கு 06

# ஜூன் 18 முதல் 20 வரை பாராளுமன்றம் கூடும்



பாராளுமன்றம் மீண்டும் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை கூடவுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

கடந்த 06ஆம் திகதி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. 06

## தோ. தொழிலாளர் சம்பளம் ரூ. 1,700ஆக அதிகரிப்பு

# பெருந்தோட்ட தொழில்துறைக்குள் இளைஞர்களை ஈர்ப்பதே நோக்கம்



தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 1,700 ரூபாவாக அதிகரிக்கப்பட்டமை தோட்டத் தொழில்துறை தொழில்களில் இளைஞர்கள் ஈடுபடாமையினால் நிலவி வரும் பாரிய பிரச்சினைக்கு தீர்வை எதிர்பார்த்தே செய்யப்பட்டதாகுமென பெருந்தோட்டத்துறை மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இளைஞர் சமூகம் பெருந்தோட்டத் துறையிலிருந்து விலகி செல்வதால், 06



03
## 05 மாதங்களில் 150 யானைகள் பலி
## யானை – மனித மோதலால் 45 பேர் உயிரிழப்பு

## ஜனாதிபதி தேர்தலில்

# தமிழ் பொது வேட்பாளராக களமிறங்குகிறார் அனந்தி

## கட்சி அலுவலகத்தில் நேற்று அறிவிப்பு




ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக களமிறங்கவுள்ளதாக ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் செயலாளர் நாயகம் அனந்தி சசிதரன் அறிவித்துள்ளார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு 06

## கிளிநொச்சியில் திடீர் சோதனை

# 01 மில். அமெ. டொலர்களுடன் மூன்று சந்தேக நபர்கள் கைது

**கிளிநொச்சி குறூப் நிருபர்**




கிளிநொச்சியில் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களுடன் 03 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ 09 வீதி கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாகவே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பாக கிளிநொச்சி படையினரின் இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து நேற்று முன்தினம் (13) இரவு 8.00 மணி 06

# கடனட்டை வட்டி வீதத்தை குறைப்பதற்கு ஆலோசனை



கடனட்டை (Credit Card) வட்டி வீதங்களை குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஆசு மாரசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் பணவீக்கம் 0.9 வீதமாக காணப்படுவதாக சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளதாக ஆசு மாரசிங்க எம்.பி. சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாம் தவணையாக 336 மில்லியன் அமெரிக்க டொலர் 06

# தபால் ஊழியர் வேலைநிறுத்தம்; 15 இலட்சம் கடிதங்கள் தேக்கம்




தபால் சேவை ஊழியர்களின் வேலை நிறுத்தத்தால் சுமார் 15 இலட்சத்துக்கும் மேற்பட்ட கடிதங்கள் தேங்கிக் கிடப்பதாக தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன. இக்கடிதங்களை எதிர்வரும் 02 நாட்களுக்குள் விநியோகிக்க நடவடிக்கை எடுப்பதாக ஒன்றிணைந்த தபால் ஊழியர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் சிந்தக்க பண்டார தெரிவித்துள்ளார். ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளருடன் நேற்று முன்தினம் (13) கலந்து 06

# கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலய திருவிழா



கொழும்பு 13, கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தின் திருவிழா நேற்று முன்தினம் (13) மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதனையிட்டு திருவிழாவில் கலந்துகொண்டவர்களுக்கு லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தினகரன் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகைகளின் அனுசரணையுடன் புனித அந்தோனியாரின் திருச்சொரூபம் தாங்கிய சிறப்புப் படங்களுடன் தினகரன் சிறப்பிதழ்களும் விநியோகிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஜோசப் பெர்னாண்டோ ஏற்பாடு செய்த அன்னதான நிகழ்வு, சங்கமித்தை மாவத்தையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவர் பிரபா கணேசன் கலந்துகொண்டு சிறப்பித்தார். (படங்கள் எம். நசார்)

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஜூன் 15 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN

**தொழுகை நேரம்**
சுபஹ் - 04.32
லுஹர் - 12.12
அஸர் - 03.39
மஃரிப் - 06.27
இஷா - 07.44

**இன்றைய சுபதினம்**
குரோதி வருடம் ஆனி 01
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# அவுஸ்திரேலியா வீசா விதிகளை கடுமையாக்குவதாக அறிவிப்பு



அவுஸ்திரேலியா அரசாங்கம் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் வீசா விதிகளை கடுமையாக்க முடிவு செய்துள்ளது. அதன்படி சுற்றுலா வீசாவில் அவுஸ்திரேலியாவுக்கு சென்று தங்கியிருந்து மாணவர் விசா பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இழக்கப்படுமென்று சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

யுத்தம், மோதல் மற்றும் வறுமை காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் நாட்டை விட்டு வெளியேறி செல்வந்த நாடுகளில் தஞ்சமடைகின்றனர்.

அதேநேரத்தில் ஏராளமான மக்கள் வெற்றிகரமான எதிர்கால நம்பிக்கையுடன் அந்த நாடுகளில் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளை நாடுகின்றனர். எனினும் ஆண்டு தோறும் பல குடியேற்ற வாசிகள் சட்ட ரீதியாகவும், சட்டவிரோதமாகவும் அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்கின்றனர். உயர் கல்விக்காக செல்பவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த தற்போது பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்படி அவுஸ்திரேலிய அரசாங்கம் கடந்த ஆண்டு தனது வீசா விதிகளை கடுமையாக்கும் திட்டங்களை அறிவித்தது. எதிர்வரும் 2025ஆம் ஆண்டுக்குள் நாட்டுக்கு வரும் புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கையை 50 சதவீதம் குறைக்கவும் அவுஸ்திரேலியா இலக்கு நிர்ணயித்துள்ளது.

இதேவேளை அவுஸ்திரேலியாவில் 2023ஆம் ஆண்டு ஜூலை 01ஆம் திகதி முதல் இந்த ஆண்டு ஜூன் 01ஆம் திகதிவரை சுற்றுலா வீஸாவில் வந்து மாணவர் விசாவுக்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை 36 ஆயிரத்தை கடந்துள்ளது.

தற்காலிக பட்டதாரி வீஸா வைத்திருப்பவர்கள் தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக மாணவர் விசாக்களுக்கு விண்ணப்பிப்பது 2022/23 இல் 30 சதவீதம் அதிகரித்துள்ளது. இது நாட்டின் மாணவர் வீஸா நடைமுறையை சீர்குலைப்பதாகவும், உயர் கல்வி பெறும் உண்மையான நோக்கத்துடன் நாட்டுக்குள் வரும் மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்காலிக பட்டதாரி வீஸாவின் கீழ் பட்டப்படிப்புக்கு பின்னர் பணி புரியும் நேரத்தை குறைக்கவும், விண்ணப்பிப்பதற்கான வயது வரம்பை 50 முதல் 30 ஆக குறைக்கவும், ஆங்கிலமொழித் திறனை உயர்த்தவும் அவுஸ்திரேலிய அரசாங்கம் தீர்மானித்திருந்திருந்தது.

# யானை – மனித மோதலால் 45 பேர் உயிரிழப்பு



வன விலங்குகளுக்கும் மனிதர்களுக்குமிடையே அதிகரித்து வரும் முரண்பாடுகளினால் இந்த வருடத்தின் கடந்த ஐந்து மாதங்களில் 150 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது. துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி 28 யானைகளும், மின்சாரம் தாக்கி 21 யானைகளும், ஹக்க பட்டாசுகளினால் 13 யானைகளும், நஞ்சூட்டப்பட்டதால் 02 யானைகளும், ரயில் விபத்துகளால் 03 யானைகளும், வீதி விபத்தினால் ஒரு யானையும், நீரில் அடித்துச் செல்லப்பட்ட சம்பவங்களால் 07 யானைகளும், ஏனைய விபத்துகளால் 04 யானைகளும் உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.


யானைகளில் பெரும்பாலானவை இள வயதிலேயே உயிரிழந்துள்ளன.

இதேவேளை அதிகரித்து வரும் யானை மனிதன் மோதல்களால் 45 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த 2023ஆம் ஆண்டு யானை – மனித மோதல் காரணமாக 488 யானைகள் உயிரிழந்துள்ளன.

184 பேர் உயிரிழந்துள்ளதாகவும் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

## தினகரன் 92

### வருடங்களுக்கு முன் தினகரன்
### இன்று 15 ஜூன் 1932



பென்ஷன் பெறுப்வர்

டொனமூர் திட்டம்

ஒருஉத்தியோகஸ்தர் உபகார வேதனம் பெறுவதற்குமுன் எத்தனை வருடங்களுக்கு அரசாங்க ஊழியத்தில் அவர் ஈடுபட்டிருக்கவேண்டு மென்று ஒரு விதி யிருப்பதை யாவரும் அறிவர். ஆனல் டொனமூர் அரசியல் திட்டத்தின்படி குறித்த வருடங்களிலும் பார்க்கக் குறைந்த காலத்திற்கு ஊழியஞ் செய்துவிட்டு அவ்விதம் தமது ஊழியகாலம் குறைந்துவிட்டதற்காக நஷ்டஈடும் பெற்று உத்தியோகஸ்தர் பென்ஷன் பெற்று வேலையினின்றும் விலகக்கூடியதாயிருக்கிறது. உயர்தர உத்தியோகஸ்தர் பலர்

### பென்ஷன் பெறுபவர்
### டொனமூர் திட்டம்

ஒரு உத்தியோகஸ்தர் உபகார வேதனம் பெறுவதற்குமுன் எத்தனை வருடங்களுக்கு அரசாங்க ஊழியத்தில் அவர் ஈடுபட்டிருக்கவேண்டு மென்று ஒரு விதியிருப்பதை யாவரும் அறிவர். ஆனால் டொனமூர் அரசியல் திட்டத்தின்படி குறித்த வருடங்களிலும் பார்க்கக் குறைந்த காலத்திற்கு ஊழியஞ் செய்துவிட்டு அவ்விதம் தமது ஊழியகாலம் குறைந்துவிட்ட தற்காக நஷ்டஈடும் பெற்று உத்தியோகஸ்தர் பென்ஷன் பெற்று வேலையினிறும் விலகக் கூடியதாயிருக்கிறது.

**(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)**

# ஜூலை 06 முதல் 22 வரை கதிர்காமம் உற்சவம்

## மதுபானசாலைகளுக்கு பூட்டு




கதிர்காமம் உற்சவத்தை முன்னிட்டு அப்பிரதேசத்திலுள்ள அனைத்து மதுபானசாலைகளையும் மூடுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் 06ஆம் திகதி முதல் ஜூலை 22ஆம் திகதி வரை கதிர்காமம் உற்சவம் ஆரம்பமாகவுள்ளது. இதன் காரணமாக அப்பிரதேசத்திலுள்ள அனைத்து மதுபானசாலைகளையும் மூடுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் உரிமம் பெற்ற அனைத்து மதுபானசாலைகளையும் இக்காலப்பகுதிக்குள் மூடுமாறு மதுவரி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை– சீனா 13ஆவது சுற்று இராஜதந்திர ஆலோசனைகள்

## பீஜிங் நகரில் திங்களன்று ஏற்பாடு



சீனாவின் பீஜிங் நகரில் எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ள சீன மக்கள் குடியரசுடனான 13ஆவது சுற்று இராஜதந்திர ஆலோசனைகளில் பங்குபற்ற இலங்கையின் தூதுக் குழுவினர் செல்லவுள்ளனர்.

இந்த தூதுக் குழுவினருக்கு வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன தலைமை தாங்கவுள்ளார்.

இந்நிலையில் சீன மக்கள் குடியரசின் வெளியுறவுத்துறை பிரதி அமைச்சர் சன் வீடாங்குடன் அவர் ஆலோசனை அமர்வுகளுக்கு இணைத் தலைவராக செயலாற்றவுள்ளார். அரசியல், பொருளாதாரம், வர்த்தகம், முதலீடு மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட இரு தரப்பு ஈடுபாட்டுக்கான துறைகளில் முன்னேற்றம் குறித்து இந்த விவாதங்கள் மூலம் ஆய்வு செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆலோசனைகளுக்கான இலங்கையின் தூதுக் குழுவில் பீஜிங்கில் நியமிக்கப்பட்டுள்ள தூதுவர் மஜிந்த ஜயசிங்க, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் சீனாவிலுள்ள இலங்கை தூதரக அதிகாரிகள் ஆகியோரும் அடங்குவர். இரு தரப்பு அரசியல் ஆலோசனைகளின் 12ஆவது சுற்றுப் பேச்சு கடந்த 2023 மே மாதம் 30ஆம் திகதியன்று கொழும்பில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## கொஹுவல மேம்பால நிர்மாணம்

# 02 மாதங்கள் போக்குவரத்தை மட்டுப்படுத்துவதாக அறிவிப்பு

கொஹுவல மேம்பாலம் நிர்மாணிக்கப்படுவதால் இரண்டு மாதங்களுக்கு கொஹுவல சந்தியில் போக்குவரத்து மட்டுப்படுத்தப்படுமென பொலிஸார் அறிவித்துள்ளனர். மேம்பால கட்டுமானத்தின் இறுதிக்கட்ட பணிகள் இன்று 15ஆம் திகதி முதல் எதிர்வரும் ஓகஸ்ட் 15ஆம் திகதிவரை நடைபெறுமென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கமைய இந்தக் காலப்பகுதியில் கொழும்பு ஹொரண வீதி பொது போக்குவரத்துக்காக மாத்திரமே திறக்கப்படும்.

கொஹுவல சந்தியை நோக்கி கனரக வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது.

மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு வாகன சாரதிகளை பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

## பொசன் உற்சவத்துக்காக

# அநுராதபுரத்துக்கு விசேட பஸ் சேவை

**திறப்பனை தினகரன் நிருபர்**

எதிர்வரும் 21ஆம் திகதி பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு இம்முறை அநுராதபுரம், மிஹிந்தலை, தந்திரிமலை ஆகிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களுக்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வரும் பக்தர்களின் வசதி கருதி விசேட பஸ் சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்தது.

மாஹோ தொடக்கம் அநுராதபுரம் வரை புகையிரத பாதையின் புனரமைப்பு வேலைகள் தொடர்ந்து இடம்பெறுவதால் கூடுதலான பஸ்களை சேவையில் ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அச்சபை தெரிவித்தது.

இந்நிலையில் பிரதான நகரங்களிலிருந்து வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களுக்கு இந்த விசேட பஸ் சேவைகள் நடத்தப்படுமெனவும் இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

வடமத்திய வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களிலிருந்து சுமார் 400 க்கும் மேற்பட்ட பஸ்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.



ஆந்திர பிரதேச முதலமைச்சராக பதவியேற்றுள்ள ஸ்ரீ சந்திர பாபு நாயுடுவை சென்னையின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் டாக்டர் டி.வெங்கடேஷ்வரன் சந்தித்து கலந்துரையாடியதுடன், அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்நிலையில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நெருக்கமான மற்றும் வளமான உறவை வளர்க்கும் எனவும் டாக்டர் டி.வெங்கடேஷ்வரன் தெரிவித்துள்ளார்.

## 19ஆம் திகதி முதல் 24ஆம் திகதிவரை

# மலேசியாவில் சாரணர் மாவட்ட ஆணையாளர் மாநாடு ஏற்பாடு

## சாரணர் தலைமையகத்தில் பாராட்டு விழா





மலேசியாவில் எதிர்வரும் 19ஆம் திகதி முதல் 24ஆம் திகதிவரை நடைபெறவுள்ள மாவட்ட ஆணையாளர் மாநாட்டுக்கான பாராட்டு விழா (12) கொழும்பிலுள்ள சாரணர் தலைமையகத்தில் நடைபெற்றது.

மலேசிய உயர்ஸ்தானிகர் பட்லிஹிஷாம் பில் அதாமி மற்றும் பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தாரிக் அரிபுல் இஸ்லாம் ஆகியோர் நிகழ்வில் பிரதம அதிதிகளாக கலந்துகொண்டனர்.

ஆணையர்களின் அறிவு மற்றும் திறனை மேம்படுத்தும் நோக்கத்தில் நடைபெறும் இந்த மாநாட்டில் தலைமையக ஆணையர், 54 மாவட்ட ஆணையர்கள் பங்கேற்கவுள்ளனர்.

பிரதம சாரணர் ஆணையாளர் சட்டத்தரணி ஜனப்ரித் பெர்னாண்டோவின் கருத்தின் அடிப்படையில் இந்த மாநாடு நடைபெறுவதுடன், 02ஆவது தடவையாக மலேசியாவில் நடைபெறவுள்ளது.

பங்களாதேஷில் நடைபெறவுள்ள இளைஞர் மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ள மாணவ சாரணர்களுக்கும் இங்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டன.

## போக்குவரத்து பொலிஸாரின்

# கொடுப்பனவுகளை அதிகரிக்க பொலிஸ் மாஅதிபர் பணிப்பு



நெடுஞ்சாலை போக்குவரத்து கடமையில் ஈடுபட்டுள்ள பொலிஸ் போக்குவரத்து திணைக்கள உத்தியோகத்தர்களின் மாதாந்த கொடுப்பனவை அதிகரித்து புதிய சுற்றறிக்கையை வெளியிட பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி தற்போதுள்ள ஒருவரின் மாதாந்த கொடுப்பனவான 1,600 ரூபாவை 6,000 ரூபாவாக அதிகரிக்குமாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவருக்கு வழங்கப்படும் மாதாந்த கொடுப்பனவான 1,800 ரூபா 6,000 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

பரிசோதகர் தர உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் 2,000 ரூபா கொடுப்பனவு 7,000 ரூபாவாகவும், பொலிஸ் போக்குவரத்து நிலைய அதிகாரிக்கு வழங்கப்படும் 2,500 ரூபா கொடுப்பனவு 7,000 ரூபாவாகவும் அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

போக்குவரத்து கடமையில் ஈடுபடும் பொலிஸ் அதிகாரிகளை மதிப்பீடு செய்து ஊக்குவிப்பதன் மூலம் திறமையான மற்றும் தரமான சேவையை பெற எதிர்பார்க்கப்படுகிறது.

வெய்யில், மழை உள்ளிட்ட இடையூறுகளுக்கு மத்தியில் சாலைகளில் சுமார் பன்னிரெண்டு மணிநேரம் போக்குவரத்தை கையாள்வது கடினமான பணி என்பதாலும், வாகனப் புகை உள்ளிட்ட நச்சுகளை சுவாசிப்பதால் அதிகமானோர் சுவாசக் கோளாறால் அவதிப்படுவதாலும், இந்தக் கொடுப்பனவை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது முதல், இரண்டாம், மூன்றாம் பிரிவுகளின் கீழ் பொலிஸ் நிலையங்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகையும் அதற்கேற்ப மாற்றப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முதல் பிரிவில் 104 பொலிஸ் நிலையங்களும், இரண்டாம் பிரிவில் 59 பொலிஸ் நிலையங்களும், மூன்றாம் பிரிவில் 444 பொலிஸ் நிலையங்களும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆனி மாதம் 01ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்ஹிஜ்ஜஹ் பிறை 08

### குறள் தரும் சிந்தனை



துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்

மது அருந்துவோர்க்கும் நஞ்சு அருந்துவோர்க்கும் வேறுபாடு கிடையாது என்பதால் அவர்கள் தூங்குவதற்கும் இறந்து கிடப்பதற்கும்கூட வேறுபாடு கிடையாது என்று கூறலாம்.

# இந்தியாவின் ஸ்திரமான ஆட்சி இலங்கைக்கு அனுகூலம் தரும்

இந்தியாவில் நடைபெற்ற மக்களவைத் தேர்தல் முடிவுகளுக்கமைய, புதிய அரசாங்கத்தில் பிரதமராக நரேந்திரமோடி கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று இரவு பதவிப்பிரமாணம் செய்துள்ளார். மக்களவைத் தேர்தலில் நரேந்திர மோடி தலைமையிலான பாரதீய ஜனதா கட்சி தனிப்பெரும்பான்மையைப் பெற்றிருக்காத போதிலும், தோழமைக் கட்சிகளின் ஆதரவுடன் பா.ஜ.க ஆட்சியமைத்திருக்கின்றது. அதன்படி பா.ஜ.க கூட்டணியின் தலைவரான நரேந்திர மோடி பிரதமராக பதவிப்பிரமாணம் செய்துள்ளார்.

நரேந்திர மோடி தொடர்ச்சியாக மூன்றாவது தடவையாக பிரதமராகியுள்ளார். இதுவரை முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு மாத்திரமே அத்தகைய சாதனையை நிலைநாட்டியிருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

ஜவஹர்லால் நேருவுக்குப் பின்னர் அத்தகைய சாதனையைப் படைத்த அரசியல் தலைவராக இந்திய வரலாற்றில் பதியப்படுகின்றார் நரேந்திர மோடி. அவரது ஆளுமைக்கும் அரசியல் சாணக்கியத்துக்கும் கிடைத்த பலனாகவே இதனைக் கருத வேண்டியுள்ளது.

பா.ஜ.க ஏனைய கட்சிகளுடன் கூட்டணி அமைக்காமல் தனியாக தேர்தலில் இறங்கியிருக்குமானால் நரேந்திர மோடி மீண்டும் பிரதமராகியிருக்க முடியாது. எதிரணியான 'இந்தியா' கூட்டணியே ஏனைய கட்சிகளை இணைத்துக் கொண்டு ஆட்சியைப் பிடித்திருக்கும்.

சந்திரபாபு நாயுடு, நிதிஷ்குமார் ஆகியோரின் கட்சிகளுடனும் ஏனைய சிறுகட்சிகளுடனும் கூட்டணி வைத்துக் கொண்டதனாலேயே பா.ஜ.க கூட்டணி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.இம்முறை தனிப்பெரும்பான்மை கிடைக்காமல் போகவே, தெலுங்கு தேசம் மற்றும் நிதிஷ்குமாரின் ஐக்கிய ஜனதா தளம் உள்ளிட்ட என்.டி.ஏ கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியமைத்துள்ளது.

இந்தத் தேர்தலில் 543 தொகுதிகளில் போட்டியிட்ட பா.ஜ.க, 240 இடங்களில் வெற்றிபெற்றது. ஆனால் பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 293 இடங்களில் வெற்றிபெற்றிருந்தது. இந்நிலையில், எதிரணியான 'இந்தியா' கூட்டணியைப் பார்க்கிலும் கூடுதல் பெரும்பான்மை ஆசனங்களை தம்வசம் வைத்திருந்த பா.ஜ.க கூட்டணி ஆட்சியமைத்திருக்கின்றது.

பா.ஜ.க ஆட்சி அரியணையில் அமர்வதற்கு முக்கிய பங்காற்றிய கட்சிகளாக டி.டி.பி, ஜே.டி.யூ ஆகிய இரண்டையுமே பிரதானமாகக் குறிப்பிட முடியும். அதேசமயம் இதர சிறிய கட்சிகளும் பங்களிப்பு வழங்கியுள்ளன. இதற்கமைய பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம்பெறுகின்ற தோழமைக் கட்சிகளுக்கும் அமைச்சரவையில் வாய்ப்பு வழங்கியிருக்கிறார் பிரதமர் நரேந்திர மோடி.

இந்திய தேர்தல் முடிவுகளைப் பொறுத்தவரை தமிழ்நாட்டின் நிலைமை மிகவும் இக்கட்டானது ஆகும். தமிழகத்தின் அத்தனை ஆசனங்களையும் வாரிச்சுருட்டி எடுத்துள்ளது திராவிட முன்னேற்றக் கழகம். காங்கிரஸின் தோழமைக் கட்சியே தி.மு.க ஆகும். மக்களவைத் தேர்தலில் 40 ஆசனங்களை அள்ளியெடுத்துக் கொண்ட போதிலும், தி.மு.கவினால் எதனையும் சாதிக்க முடியாத நிலைமையே உள்ளது.

மத்தியில் பா.ஜ.க கூட்டணி ஆட்சியமைத்திருக்கின்றது. அதேவேளை பா.ஜ.கவுக்கு எதிரான நிலைப்பாடு கொண்ட கட்சியாக தி.மு.க உள்ளது. தனக்கு எதிராக கட்சி மத்தியில் ஆட்சியமைத்திருக்கையில், அரசுக்கு அழுத்தம் பிரயோகித்து அனுகூலங்களைப் பெற்றெடுப்பதென்பது தி.மு.கவினால் இயலாத காரியம் ஆகும். ஆகவே 40 ஆசனங்களைக் கொண்டிருந்தும், கையாலாகாத கட்சியாகவே காலத்தைக் கடத்தப் போகின்றது தி.மு.க என்பது இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

நிலைமை இவ்வாறிருக்கையில், மத்தியில் பா.ஜ.க தலைமையிலான ஆட்சி இறுதிவரை இடையூறின்றித் தொடருமா அல்லது இடைநடுவில் கலைந்து விடுமா என்ற வாதப்பிரதிவாதங்கள் தற்போது முன்வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இத்தகைய சந்தேகங்களுக்குக் காரணம் இல்லாமலில்லை.

கோட்பாட்டு ரீதியில் நோக்கும் போது பா.ஜ.கவுக்கும் நிதிஷ்குமார் மற்றும் சந்திரபாபு நாயுடு ஆகியோருக்கும் இடையில் நெருக்கம் கிடையாது. முரண்பட்ட சித்தாந்தங்கள் கொண்ட கட்சிகளாகவே பா.ஜ.கவும் மற்றைய கூட்டணிக் கட்சிகளும் உள்ளன.

எனவே ஆட்சியின் இடைநடுவில் அவ்விரு கட்சிகளும் பா.ஜ.கவிலிருந்து பிரிந்து சென்று விடுமோ என்ற ஐயம் தவிர்க்க முடியாததாகும். அதுவும் கட்சி மாறுவதில் நிதிஷ்குமார் மிகவும் கைதேர்ந்தவரென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அவர் இதுவரை 8 இற்கும் மேற்பட்ட தடவை கட்சி மாறியுள்ளாரென்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆகவே நரேந்திர மோடியின் அரசாங்கத்திலிருந்து நிதிஷ்குமார் பிரிந்து செல்லக் கூடுமென்ற சந்தேகத்தை மறுப்பதற்கில்லை என்கிறார்கள் இந்திய அரசியல் ஆய்வாளர்கள்.

ஆனால் மறுபுறத்தில் வேறுவிதமாக அபிப்பிராயங்கள் முன்வைக்கப்படுகின்றன. நரேந்திர மோடி மிகவும் ஆளுமையும், அரசியல் சாணக்கியமும், இராஜதந்திரமும் கொண்ட தலைவராவார். கூட்டணிக் கட்சிகளை தம்முடன் எவ்வாறு தக்கவைத்துக் கொள்ள வேண்டுமென்ற விவேகம் அவருக்கு உள்ளது. எனவே இன்றும் ஐந்து வருடங்களுக்கு பா.ஜ.க தலைமையிலான கூட்டணியின் ஆட்சி தொடரும் என்கிறார்கள் அவர்கள்.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, இலங்கையும் இந்தியாவும் வரலாற்று ரீதியாக நெருக்கமான நட்புறவு கொண்ட நாடுகளாகும். பொருளாதார ரீதியில் இரு நாடுகளும் பின்னிப்பிணைந்துள்ளன. இந்தியாவில் அரசியல் நிலைமை ஸ்திரமாக இருந்தாலேயே இலங்கைக்கும் அனுகூலங்கள் இருக்குமென்பதை மறந்துவிடலாகாது.

editor.tkn@lakehouse.lk

# தியாக வரலாறுகளை நினைவுகூரும் இறுதிக் கடமை ஹஜ்

முஸ்லிம்கள் வருடத்தில் இரு பெருநாட்களைக் கொண்டாடுகிறார்கள். இஸ்லாமிய வருடத்தில் பத்தாவது மாதமாக விளங்கும் ஷவ்வால் தலைப்பிறையன்று, ஈதுல் பித்ர் எனும் ஈகைப் பெருநாள் அனுஷ்டிக்கப்படுகிறது. இது இத்தினத்துக்கு முதல் மாதமாகத் திகழும் ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்று அல்லாஹ்வின் ஆணையை நிறைவேற்றி விட்டோம் என்ற களிப்பின் வெளிப்பாடாகவும் கொண்டாடப்படுகிறது.

அடுத்தது ஈதுல் அழ்ஹாவெனும் தியாகப் பெருநாளாகும். இஸ்லாமிய ஆண்டின் இறுதி மாதமான துல்ஹஜ் பிறை பத்தாம் நாள் இப்பெருநாள் கொண்டாடப்படுகிறது.

இஸ்லாம் விதியாக்கியுள்ள ஐம்பெரும் கடமைகளில் இறுதிக் கடமையாக சர்வதேச மட்டத்தில் முஸ்லிம்கள் ஓரிடம் திரண்டு மேற்கொள்ளும் வணக்க வழிபாடாக ஹஜ் கடமை அமைகிறது. இப்ராஹீம் (அலை) அவர்களின் வாழ்க்கையில் இடம்பெற்ற மாபெரும் தியாக வரலாற்று நிகழ்வுகளை நினைவுகூரும் வகையில் இப்பெருநாள் அனுஷ்டிக்கப்படுகிறது.

தியாகத்தின் உச்ச அதி உச்சகட்ட செயற்பாடான நிகழ்வுகளை ஹஜ் கடமையை நிறைவேற்றும் ஹாஜிகள் அதே இடத்திற்குச் சென்று, அதே பாணியில், நினைவுகூரும் வணக்க வழிபாடாக ஹஜ் கடமை அமையப் பெற்றிருக்கிறது.

அத்துடன் சர்வதேச ரீதியான சமத்துவ, சகோதரத்துவ பண்பாட்டின் அதி உச்ச கட்ட வெளிப்பாட்டையும் ஹஜ்ஜின் போது காணலாம்.



அரசனும் ஆண்டியும் சரிசமமாக மிகவும் எளிமையான வெண்ணுடையில் அவர்கள் காட்சியளிப்பர். அது இஹ்ராம் உடை என அழைக்கப்படுகிறது. அவ்வாறான கண்கொள்ளாக் காட்சியை மக்காவில் காணலாம்.

உலகில் உன்னத நிலையில் வாழ மனிதனை புடம் போடும் வணக்க வழிபாடுகளுடன் கூடிய ஒரு பூரண வாழ்க்கைத் திட்டம் இஸ்லாம் என்பதை அதன் ஐம்பெரும் கடமைகள் உணர்த்தி நிற்பதை காணலாம். அந்த வகையிலே இறுதிக் கடமை ஹஜ்ஜும் அமையப்பெற்றிருக்கிறது. அது அகில உலக முஸ்லிம்களது சர்வதேச மாநாடா கவும் விளங்குகிறது.

**பேருவளை பீ.எம். முக்தார்...**

# எத்தலவெட்டுனுவேவ முஸ்லிம் ம.வியில் குவைத் நிதியுதவியில் புதிய கட்டடம்

குவைத் அரசாங்கத்தின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் அல் ஹிமா இஸ்லாமிய சேவிஸ் திட்டத்தின் கீழ் பௌதீக வளம் குறைந்த பாடசாலைகளுக்கு வகுப்பறைக் கட்டடங்களை நிர்மாணித்துக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் அநுராதபுரம் , எத்தலவெட்டுனுவேவ முஸ்லிம் மத்திய மகாவித்தியாலயத்தில் 4 வகுப்பறைகளைக் கொண்ட முதலாது மாடி விமர்சையாக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அனுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பிணர் இசாக் ஏ ரஹ்மான் மற்றும் குவைத் தூதுவரின் பிரநிதியாக இலங்கையின் குவைத் தூதுவர் அலுவலக அதிகாரி அஷ்ஷேக் எம் .பிர்தௌஸ் நளிமி, அல் ஹிமா இஸ்லாமிய சேவிஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.எம். ஏ நூறுல்லாஹ் நளிமி, உபதலைவர் ஏ.ஆர்.எம். அமினுடீன், கல்லூரி அதிபர் ஏ.சி.அமீன் மற்றும் உதவிப் கல்விப் பணிப்பாளர் எம். நவாஸ், பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் பெருமளவில் கலந்து சிறப்பித்தனர்.

குவைத் அரசாங்கம் இலங்கையின் பின்தங்கிய பிரதேசத்தில் 40 க்கும் மேற்பட்ட பாடசாலைகளில் இவ்வாறாக வகுப்பறைக் கட்டடங்களை நிர்மாணித்துள்ளது. குவைத் அரசு கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து இலங்கையில் உள்ள மாணவர்கள் கல்வியில் முன்னேறி வாழ்வதற்காக கடந்த பத்து





வருடங்களாக இலங்கைக்கு உதவி வருகிறது.

இத்திட்டத்தினை அநுராதபுரம் மாவட்டத்தில் பின்தங்கிய பாடசாலைகளுக்கு பெற்றுத் தருமாறும் அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இசாக் ஏ ரஹ்மான் குவைத் தூதுவரிடம் கோரிக்கை விடுத்தாகவும் பணிப்பாளர் நூறுள்ளாஹ் மௌலவி தெரிவித்தார்.

இப்பாடசாலையின் ஏனைய குறைபாடுகளை பாராளுமன்ற உறுப்பினர் உடன் நிறைவேற்றி தருவதாக உறுதியளித்தார். இப்பாடசாலையில் கல்வி கற்ற உயர் தர மாணவர்கள் மூவர் 3 ஏ சித்தியடைந்ததை அதிதிகள் பாராட்டினார்கள்.

**அஷ்ரப் ஏ சமத்...**

# தமிழக வேலைவாய்ப்பில் திருநங்கையை புறக்கணித்த நிறுவனத்துக்கு உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு!

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் 2017ஆம் ஆண்டு குரூப் 2 தேர்வில் கலந்துகொண்டு 121.5 கட்ஓஃப் மதிப்பெண்கள் பெற்ற திருநங்கை அனுஸ்ரீ தொடர்ந்த வழக்கில், மாற்று பாலினத்தவரை சிறப்புப் பிரிவினராக கருதி கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருநங்கைகளுக்கான நலவாரியம், தொழில் தொடங்குவதற்கான நிதி, கட்டணமில்லா பேருந்து பயணம், கட்டணமில்லா கல்வி என பல்வேறு சமூகநலத் திட்டங்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இருப்பினும் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் மாற்று பாலினத்தவருக்கான சிறப்பு இடஒதுக்கீடு தேவை என்ற கோரிக்கை இதுவரை நிறைவேறவில்லை. தமிழ்நாட்டின் திருநங்கைகள் நலவாரியத்தின் உறுப்பினராகவும்,



செயற்பாட்டாளராகவும் இருந்து வரும் திருநங்கை அனுஸ்ரீ சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கு ஒன்றில், தமிழக அரசு மாற்று பாலினத்தவர்களை சிறப்பு பிரிவாக கருதி அவர்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் இடஒதுக்கீட்டை வழங்க வேண்டும் என்று உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

தான் தொடர்ந்த வழக்கு குறித்து திருங்கை அனுஸ்ரீ பேசினார். கீழ்கண்ட தகவல்களை அவர் தெரிவித்தார்.

2017ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட குரூப் 2 தேர்வை எழுதியுள்ளார் அனுஸ்ரீ. ஆனால், தேர்வு முடிவுகள் வெளியான பிறகு அவரது கட்ஓஃப் மதிப்பெண் போதவில்லை என்று அவருக்கு பணி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யாமல் நிராகரித்து விட்டது டி.என்.பி.எஸ்.சி.

திருநங்கையர் பிரிவில் தேர்வெழுதியிருந்தாலும், அந்த பிரிவுக்கான சிறப்பு ஒதுக்கீடு எதுவும் இல்லை என்று சுட்டிக் காட்டிய டிஎன்பிஎஸ்சி, அனுஸ்ரீ சார்ந்த சமூகத்தின் பெண்களுக்கான இடஒதுக்கீட்டு வரிசைப்படி அவரது மதிப்பெண் போதவில்லை என்று அவரை நிராகரித்துள்ளது.

இதை எதிர்த்து2018ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்திருந்தார் அனுஸ்ரீ. இந்த வழக்கில் தற்போது அவருக்கு சிறப்பு இடஒதுக்கீட்டின் கீழ் பணி வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த வழக்கு தொடர்பாக தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் விளக்கமளிக்கக்கோரி உத்தரவிட்டது உயர்நீதிமன்றம்.

அந்த தீர்ப்பின்படி, வருகின்ற 22.6.2024க்குள் அனுஸ்ரீயின் சான்றிதழ் சரிபார்ப்பை முடித்திருக்க வேண்டும் என்றும், தமிழக அரசு மாற்று பாலினத்தவருக்கு சிறப்பு பிரிவின் கீழ் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

# இத்தாலிக்குச் சென்ற இந்திய பிரதமருக்கு பெருவரவேற்பு

'ஜி - 7' மாநாட்டில் பங்கேற்பதற்காக இத்தாலி சென்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு, சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த மாநாட்டில் எரிசக்தி, ஏஐ எனப்படும் செயற்கை நுண்ணறிவு மற்றும் ஆபிரிக்க விவகாரங்கள் குறித்து விவாதிக்க உள்ளதாக மோடி தெரிவித்தார்.

ஜி 7 நாடுகளின் உச்சி மாநாடு இத்தாலியின் பஷானோ நகரில் உள்ள அபுலியாவில் 13ம் திகதி தொடங்கி 15ம் திகதி வரை நடக்கிறது. இந்த மாநாட்டில் ரஷ்யா உக்ரைன் போர், இஸ்ரேல் காசா போர் ஆகியவை முக்கிய விவாதப் பொருளாக இருக்கும்.

இந்நிலையில் மூன்றாவது முறையாக பிரதமராக பதவியேற்றுள்ள மோடி, தன் முதல் வெளிநாட்டு பயணமாக நேற்றுமுன்தினம் இத்தாலி புறப்பட்டு சென்றார். அங்கு அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. நேற்று நடைபெற்ற ஜி 7 கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்று உரையாற்றினார்.

இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனி அழைப்பின் பேரில்



இத்தாலியில் நடக்கும் ஜி 7 உச்சி மாநாட்டில் மோடி பங்கேற்கிறார். கடந்த ஆண்டில் இத்தாலி பிரதமர் மெலோனி இருமுறை இந்தியா வந்திருந்தார். அந்த பயணம் இரு தரப்பு நாடுகளின் திட்டங்களை வேகப்படுத்தின. இந்தியா இத்தாலியின் உறவை பலப்படுத்துவதிலும், இந்தோ பசிபிக் மற்றும் மத்திய தரைக்கடல் பகுதிகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதிலும் இரு தலைவர்களும் உறுதியாக உள்ளனர். உச்சி மாநாட்டில் பங்கேற்கும் மற்ற தலைவர்களையும் மோடி சந்தித்தார்.

ஜி 7 மாநாட்டின் கலந்துரையாடலின் போது, செயற்கை நுண்ணறிவு, எரிசக்தி, ஆபிரிக்கா மற்றும் மத்திய தரைக்கடல் விவகாரங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படுகின்றது.

# இளைஞர்கள் மத்தியில் பா.ஜ.க மீதான ஈர்ப்பு இன்னுமே குறையாதது ஏன்?



## நரேந்திர மோடியின் வெற்றிக்கு உரமூட்டிய இளவயதினர்!

இந்தியா போன்ற ஒரு பெரிய மற்றும் பன்முகத்தன்மை வாய்ந்த நாட்டில், வாக்காளர்களின், குறிப்பாக இளைஞர்களின் (25 வயதுக்குட்பட்ட) விருப்பத் தேர்வுகள், மிகவும் கவனமாக ஆராய்ந்து புரிந்து கொள்ளப்பட வேண்டிய ஒரு விஷயமாகும்.

முக்கியமான தேர்தல் களங்களில், அவர்களது வாக்குகள்தான் யார் வெற்றியாளர் என்பதைத் தீர்மானிக்கும். எனவே அவர்கள்தான் அரசியல் கட்சிகளின் பிரதான இலக்குகள். எனவே, நடந்து முடிந்த 2024 மக்களவைத் தேர்தலில் இளைஞர்கள் வாக்களித்தது எப்படி என்பது ஆராயப்பட வேண்டியதாகும்.

இளைஞர்கள் மத்தியில் பாஜக ஈர்ப்பு:

2019ஆம் ஆண்டில் 20 சதவீத இளைஞர் வாக்காளர்கள் காங்கிரஸை ஆதரித்தனர். இந்த எண்ணிக்கை 2024இல் ஒரு சதவீதம் மட்டுமே அதிகரித்துள்ளது. இளைஞர்கள் மத்தியில் காங்கிரஸ் கட்சிக்கான ஆதரவு பெருமளவில் வளரவில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது.

மாறாக, 2019இல் இளைஞர்களிடம் இருந்து பா.ஜ.கவுக்கு நல்ல ஆதரவு கிடைத்தது. அப்போது 40 சதவீத இளைஞர் வாக்காளர்களின் ஆதரவைப் பெற்றது பா.ஜ.க. இந்த இளைஞர் வாக்கு வங்கிதான், வயது முதிர்ந்த வாக்காளர்களிடமிருந்து பா.ஜ.கவை வேறுபடுத்திக் காட்டுகிறது.

2024ஆம் ஆண்டில் பா.ஜ.கவின் இளம் ஆதரவாளர்களின் எண்ணிக்கை பெரிய அளவில் குறையவில்லை. 25 வயதுக்குட்பட்ட வாக்காளர்களிடையே ஒரு சதவீத வாக்குகளும், 26 முதல் 35 வயதுக்குட்பட்ட வாக்காளர்களிடையே இரண்டு சதவீத வாக்குகளும் மட்டுமே குறைந்துள்ளன.

இங்கு ஒரு கேள்வி எழுகிறது? பின்னர் எப்படி இந்த முறை காங்கிரஸ் கட்சியால், பா.ஜ.கவுக்கு சவால் விட முடிந்தது?

2024 மக்களவைத் தேர்தலில், 21 சதவீத இளம் வாக்காளர்கள் காங்கிரஸையும், 39 சதவீதம் பேர் பா.ஜ.கவையும், 7 சதவீதம் பேர் பா.ஜ.கவின் கூட்டணிக் கட்சிகளையும் ஆதரித்தனர். தேசிய ஜனநாயக கூட்டணிக்கு மொத்தம் 46 சதவீத இளைஞர்கள் வாக்குகள் கிடைத்துள்ளன.

இருப்பினும், இந்தியா கூட்டணிக்கு என்ன பலன் கிடைத்தது என்றால், காங்கிரஸ் கூட்டணிக் கட்சிகள் 12 சதவீத இளைஞர் வாக்குகளைப் பெற்றன. இது பா.ஜ.க கூட்டணிக் கட்சிகளை (7%) விட அதிகமாக இருந்தது. மேலும் இது என்.டி.ஏ மற்றும் இந்தியா கூட்டணிக்கு இடையிலான வாக்குப் பங்கில் இருந்த இடைவெளியைக் குறைக்க உதவியது.

சுருக்கமாகச் சொன்னால், பா.ஜ.க தனது இளைஞர் ஆதரவை குறிப்பிடத்தக்க இழப்பு ஏதுமின்றி, அப்படியே தக்கவைத்துக் கொண்டது. அதேநேரத்தில் காங்கிரஸும் அதன் கூட்டணிக் கட்சிகளும் இளம் வாக்காளர்கள் மத்தியில் கணிசமான வெற்றியைப் பெற்றன.

மிக முக்கியமாக, காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளின் வாக்குப் பங்கு, வயது வாரியான வாக்காளர் குழுக்களில் சமமாக இருந்தபோதும், பா.ஜ.கவைப் பொறுத்தவரை, வயது அதிகரிக்கும்போது ஆதரவு குறைந்துள்ளது.

வயதான வாக்காளர்களை விட, இளம் வாக்காளர்கள் மத்தியில் பா.ஜ.கவின் மீதான ஈர்ப்பு அப்படியே உள்ளது என்பதே இதன் அர்த்தம்.

இந்தியத் தேர்தல்களில் பெண் வாக்காளர்களின் முக்கியத்துவம் மிகைப்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது.

சமீப ஆண்டுகளில் இந்திய அரசியலில் பெண்கள் அதிக முக்கியத்துவத்தைப் பிடித்துள்ளனர்.

ஆனால் மறுபுறம், பா.ஜ.கவுக்கு 2019இல் ஒரு பெரிய வெற்றி மற்றும் 2024இல் ஓரளவு வெற்றி என கிடைத்துள்ள போதிலும், பா.ஜ.கவுக்கு ஆதரவாக பெண்களின் வாக்குகளில் ஒரு தீர்க்கமான மாற்றம் ஏற்பட்டுள்ளது எனக் கூற எந்த ஆதாரமும் இல்லை.

நிச்சயமாக, இந்தியப் பெண்கள் முன்பை விட அதிக எண்ணிக்கையில் வாக்களிக்க வருகிறார்கள்.

2019 மக்களவைத் தேர்தலின் போது, ஆண்களின் வாக்குப்பதிவை விட பெண்களின் வாக்குப்பதிவு வெறும் 0.6% மட்டுமே குறைவாக இருந்தது. ஏனெனில் 1990களில் இந்த வித்தியாசம் 10% அதிகமாக இருந்தது.

ஆனால் தேசிய அளவில் பா.ஜ.கவுக்கு ஆதரவான வகையில் பெண்களின் வாக்குகளில் ஒரு தீர்க்கமான மாற்றம் ஏற்பட்டுள்ளது என்ற கூற்றை நிரூபிக்க முடியவில்லை.

தேர்தல் முடிவுகள் கூறுவது:

காங்கிரஸ் தொடர்ந்து ஆண்களை விட பெண்களிடையே அதிக ஆதரவைப் பெற்றுள்ளது.

தேர்தலுக்குப் பிந்திய கருத்துக்கணிப்பின் தரவுகள், ஆண்களுடன் ஒப்பிடும்போது பெண்களிடையே பா.ஜ.க அதிக ஆதரவைப் பெறவில்லை என்பதைக் காட்டுகிறது. இது 2024 மக்களவைத் தேர்தலுக்கு மட்டுமல்ல, கடந்த 2019 மற்றும் 2014 மக்களவைத் தேர்தலுக்கும் பொருந்தும்.

சமீபத்தில் நடந்து முடிந்த தேர்தலில் 37% ஆண்களும் 36% பெண்களும் பா.ஜ.கவுக்கு வாக்களித்துள்ளனர், அதாவது அக்கட்சி பெற்ற வாக்குகளில் ஒரு சதவீத பாலின வேறுபாடு மட்டுமே உள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

மறுபுறம், காங்கிரஸ் தொடர்ந்து ஆண்களை விட பெண்களிடையே அதிக ஆதரவைப் பெற்றுள்ளது. 2024இல் காங்கிரசுக்கு ஆண்களை விட பெண்களின் ஆதரவே அதிகமாக கிடைத்துள்ளது.

தலித்துகள், பழங்குடியினர், கிராமப்புற வாக்காளர்கள் போன்ற பல்வேறு சமூகங்களிடையே பா.ஜ.க தனது அடித்தளத்தை அதிகரித்தாலும், 2024ஆம் ஆண்டில் பதிவான பெண்கள் வாக்குகள் குறித்த தரவுகள், பெண் வாக்காளர்களிடையே பா.ஜ கவுக்கு குறைவான செல்வாக்கே இன்றும் உள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறது.





இந்தியப் பெண்கள் முன்னரை விட தற்போது வாக்களிப்பதில் கூடுதல் ஆர்வம்

# பலஸ்தீன மக்களின் வலிகளை சர்வதேசம் புறக்கணிக்கின்றதா?







## சிட்னி நூல் வெளியீட்டில் தனபாலசிங்கம் உரை

பலஸ்தீனத்தில் பலஸ்தீன மக்களுக்கு எதிராக, இஸ்ரேலிய நில ஆக்கிரமிப்பு செயற்பாடுகளை ஆண்டு வரிசையில் தரவுகளுடன் ஐங்கரன் விக்கினேஸ்வரா விளக்கியுள்ளார் என 'பாலஸ்தீனம் எரியும் தேசம்' நூலை அறிமுகம் செய்த சிட்னியின் மூத்த தமிழ் செயற்பாட்டாளர் தனபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

சிட்னி தமிழ் மன்றம் ஆதரவில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடும் இலக்கிய அரங்கும் அண்மையில் நடைபெற்றன.

சிட்னியில் நடைபெற்ற இந்நிகழ்வில் மூத்த தமிழ் செயற்பாட்டாளர் தனபாலசிங்கம் மேலும் தெரிவிக்கையில், "தற்போது பலஸ்தீன மக்கள் மிகவும் நெருக்கடியான காலத்தில் இனப்படுகொலை ஒன்றுக்கு முகம்கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். உலக நாடுகள் வெறுமனே கண்டிப்பதுடன் கைகட்டி வேடிக்கை பார்க்கின்றன.

இந்நூலில் அரசியல் வரலாற்றுத் தகவல்களை ஐங்கரன் விக்கினேஸ்வரா தெளிவாக விளக்குகியுள்ளார்" எனத் தெரிவித்தார்.

"ஐங்கரன் விக்கினேஸ்வரா அவர்கள் பலஸ்தீன மக்கள் எதிர்நோக்கிய, நோக்குகின்ற பிரச்சனைகள் தொடர்பாக எழுதிய கட்டுரைகளின் தொகுப்பான 'பாலஸ்தீனம் எரியும் தேசம்' என்ற நூலானது பலஸ்தீன மக்களின் வலிகளை உலகிற்கு வெளிக்காட்டியுள்ளது.

இந்நூலில் நிகழ்கால பலஸ்தீன போர்க்கள நிகழ்வுகளின் ஆய்வுக் கட்டுரைகள் பல வெளியாகியுள்ளன. நூறாண்டுகளாக தொடரும் துயரத்தைச் சுமந்த எரிகின்ற பாலஸ்தீன தேசம் பற்றிய வரலாற்றுப் பார்வையில் கட்டுரைகள் இந்நூலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இன்று பலஸ்தீனம் முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டு பல துண்டுகளாக்கப்பட்டு சிதறடிக்கப்பட்டுள்ளது. சர்வதேசமும் இவர்களை கைவிட்டுள்ளது. எவ்வாறு நிலங்கள் துண்டாடப்பட்டன, எவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்டன, மக்கள் மீது எவ்வாறு போர் திணிக்கப்பட்டது. வன்முறைகளும் இடப்பெயர்வுகளும் காலனித்துவ நாடுகளின் சதிகளும் துரோகங்களும் அவர்களின் இரட்டை நிலைப்பாடுகளும், எனப் பல பொதுத்தன்மைகளை இந்நூலில் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

இலங்கை இலக்கிய உலகில் நீண்ட காலம் அறிமுகமான ஐங்கரன் விக்கினேஸ்வரா நீண்ட காலமாக சர்வதேச அரசியல் விவகார ஆய்வுக் கட்டுரைகளை எழுதிவருபவர். இதற்கு ஆழமான புரிதலும் நீண்டகால தெளிவான நோக்கமும் இருக்க வேண்டும்" என்றும் தனபாலசிங்கம் தெரிவித்தார்.

'பாலஸ்தீனம் எரியும் தேசம்', 'ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல்', 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடு கடந்த வாரம் ஜூன் 7 ஆம் திகதி சிட்னியில் உள்ள பெமுள்வே சமூக மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வின் தலைமையுரையை எழுத்தாளர் மாத்தளை சோமு ஆற்றினார். அதன்பின் பாலஸ்தீனம் எரியும் தேசம் நூல் அறிமுகவுரையை தனபாலசிங்கம் நிகழ்த்தினார். அதன் பின் 'ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல்' நூலின் அறிமுகவுரையை டொக்டர் ஹாரூன் காசிம் ஆற்றினார்.

'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' நூலின் அறிமுகவுரையை எழுத்தாளர் சுந்தரதாஸ் ஆற்றினார்.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு, சிறப்புரை நிகழ்த்தினார். அத்துடன் திருநந்தகுமார், பாடும் மீன் சிறிஷ்கந்தராஜா ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

சிட்னி தமிழ் மன்றம் ஆதரவில் நடைபெற்ற நூல் வெளியீடு மற்றும் இலக்கிய அரங்கின் ஏற்புரையை ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்தினார்.





# மறுவடிவம் அறக்கட்டளை அமைப்பு ஏற்பாட்டில் முன்பள்ளி மாணவர் விளையாட்டுப் போட்டி

பொத்துவில் மறுவடிவம் அறக்கட்டளை அமைப்பின் ஏற்பாட்டில், மறுவடிவம் அறக்கட்டளை அமைப்பினரின் ஐந்து வருட பூர்த்தியை முன்னிட்டு முன்பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் அன்மையில் பொத்துவில் களப்புக்கட்டு சிறுவர் பூங்காவில் இடம்பெற்றன.

குறித்த நிகழ்வில் றிஸ்லி முஸ்தபா எடியுகேசன் எய்ட் சமூக சேவைகள் அமைப்பின் சார்பாக முன்பள்ளி மாணவர்களுக்கான பாடசாலை புத்தகப்பை மற்றும் கொப்பிகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்விற்கு அமைப்பின் உறுப்பினர்களான ஏ.ஜே. எம்.ஹஸான் மற்றும் எம்.எம். அம்ஜத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அஷ்ரப் கான்...

# காரைதீவு கூடைப்பந்தாட்ட கழகம்(KBC) சாம்பியனானது

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள களுதாவளை கெனடி விளையாட்டுக் கழகம் நடத்திய கிழக்கு மாகாண கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் காரைதீவு கூடைப்பந்தாட்டக் கழகம்(KBC) வெற்றிவாகை சூடி சாம்பியனானது.



இச்சுற்றுத் தொடரில், கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 6 கூடைப்பந்தாட்டக் கழகங்கள் பங்குபற்றின.

சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டியானது கடந்த ஞாயிற்றுக்கிழமை களுதாவளை மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் பிற்பகல் 5.30 மணியளவில் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியானது காரைதீவு கூடைப்பந்தாட்ட விளையாட்டு கழகத்திற்கும், சிவானந்தா கூடைப்பந்தாட்ட விளையாட்டு கழகத்திற்கும் இடையே இடம் பெற்றது.

இதில், காரைதீவு கூடைப்பந்தாட்ட விளையாட்டுக் கழகம் 81:69 புள்ளியின் அடிப்படையில் வெற்றியினை தமதாக்கி கெனடி கூடைப்பந்தாட்ட சுற்றுத் தொடரின் சாம்பியனானது.

காரைதீவு கூடைப்பந்தாட்ட விளையாட்டுக் கழகம் சுற்றுதொடரின் முதலாவது போட்டியில் சிவானந்தா கூடைப்பந்தாட்ட விளையாட்டுக் கழகத்தை வென்று, இரண்டாவது போட்டியில் தன்னாமுனை கூடைப்பந்தாட்ட கழகத்தை வென்று, அரை இறுதிப்போட்டியில் களுதாவளை மகா ஶ்ரீவித்தியாலய கூடைப்பந்தாட்ட அணியை வென்று இறுதிப் போட்டிக்கு தெரிவானதும் குறிப்பிடதக்கது.





கெனடி விளையாட்டுக் கழகத்தின் தலைவர் த. சர்ஜின் தலைமையில் நடைபெற்ற இறுதிச் சுற்று நிகழ்வுக்கு அதிதிகளாக ச. நந்தகுமார் (அம்பாறை மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் தலைவர்), களுதாவளை சுயம்புலிங்க பிள்ளையார் ஆலய பரிபாலன சபையின் தலைவர் க.பாஸ்கரன், சிவசக்தி ஸ்ரீமுருகன் ஆலய பரிபால சபையினர், செட்டிபாளையம் கண்ணகி அம்மன் ஆலய தலைவர் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர்.

இச்சுற்றுதொடரானது 7, 8, 9 ஆகிய திகதிகளில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

வி.ரி.சகாதேவராஜா...
(காரைதீவு குறூப் நிருபர்)

# T 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கைக்கான உத்தியோகபூர்வ பாடல்




தெற்காசிய பொப் பாடல் நட்சத்திரம் யொஹானி "Yohani", மேற்கத்திய இசை உலகின் சிறந்த பாடகர்களான Sean Paul , Kes ஆகியோருடன் இணைந்து T 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கைக்கான உத்தியோகபூர்வ பாடலை வெளியிட்டுள்ளார்.

ஷான் பாலுடன் Sean Paul யொஹானி ஒரு பாடலில் இணைந்து செயல்பட்டுள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். இதேவேளை 'Out Of This World' என்று இதற்கு பெயரிடப்பட்டுள்ளது. டி20 உலகக் கிண்ண போட்டியில் இலங்கை தேசிய அணிக்காக ரசிகர்களை ஒன்று திரட்டவும் தேசிய அணியை ஊக்குவிக்குவிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஆற்றல்மிக்கதாக இது அமைந்துள்ளது. இப்பாடலின் சிங்கள பதிப்பிற்கு முர்ஷாத் உவைஸ் , லக்கி லக்மினா மற்றும் திலாஞ்சனா செனவிரத்ன ஆகியோர் பங்களிப்பு செய்துள்ளனர். இலங்கை கிரிக்கெட்டின் பெருமைக்காக உருவாக்கப்பட்ட இந்தப் பாடலுக்காக சீன் பால் மற்றும் கேஸ் ஃபார் யொஹானி இடையே வரலாற்று ரீதியிலான ஒத்துழைப்புக்கு ஒரு பெரிய பாத்திரத்திற்கு வழிவகுத்துள்ளது. இது யோஹானியின் சர்வதேச செல்வாக்கை வெளிப்படுத்தியுள்ளதுடன், இலங்கையரின் ஒரு உலகளாவிய பொழுதுபோக்கின் சின்னமாக தனது நிலையை வலுப்படுத்தியுள்ளது.



யொஹானிக்கான தொடர்ச்சியான குறிப்பிடத்தக்க சாதனைகளை இந்த ஒத்துழைப்பு பிரதிபலித்துள்ளது. அவரது முதல் பாடல் தொகுப்பாக இது வெளியிடப்பட்டுள்ளது. இலங்கை கிரிக்கெட்டின் பெருமைக்காக உருவாக்கப்பட்ட இந்தப் பாடலுக்காக ஷான் பால் மற்றும் கேஸ் ஃபார் யொஹானி ஆகியோருக்கு இடையிலான வரலாற்று ஒத்துழைப்பில் Outright Play இன் நிறுவனம் முக்கிய பங்கு வகித்துள்ளது.

## இலங்கையில் தேர்தல்...

விஸ்தரிக்கப்பட்ட கடன் வசதிக்கான இரண்டாவது மதிப்பீடு மற்றும் ' பிரிவுக்கூறு IV ஆலோசனை தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள், இலங்கை தொடர்பில் அமெரிக்காவின் வொஷிங்டனில் நேற்று முன்தினம் (14) நடத்திய விசேட ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை பிரதிநிதிகள் குழுவின் சிரேஷ்ட தலைவர் பீட்டர் ப்ரூவர் தலைமையில் இந்த ஊடகவியலாளர் மாநாடு நடைபெற்றது.

இலங்கையில் தேர்தலை நடத்துவதில் சர்வதேச நாணய நிதியத்துக்கு எவ்வித பிரச்சினையும் இல்லையென குறிப்பிட்ட அவர், சர்வதேச நாணய நிதியம் அனைத்து நாடுகளினதும் ஜனநாயகத்தை மதிப்பதாகவும் , இதுவரை தேர்தல் குறித்து எதுவும் அறிவிக்கவில்லை. இலங்கையில் தேர்தல் அறிவிப்பு இடம்பெற்ற பின்னர் அதற்கு ஏற்ப விரிவாக்கப்பட்ட கடன் திட்டத்தின் அட்டவணையை மாற்றுவது குறித்து அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட காலத்துக்கும் ஜனநாயக ரீதியில் தேர்தல் நடத்துவதை வரவேற்பதாக குறிப்பிட்ட அவர், தேர்தலை நடத்தும் செயல்முறையை முழுமையாக மதித்து, அதற்குரிய செயல்முறையை கடைபிடிப்பதாகவும் கூறினார்.

இதேவேளை இலங்கையில் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பான விடயத்தில் போதுமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், இலங்கையின் பொருளாதாரம் இன்னமும் அனர்த்த நிலையில் உள்ளது. எனவே சீர்திருத்தங்களின் வேகம் தொடர்ந்தும் பேணப்பட வேண்டுமென சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுவின் சிரேஷ்ட தலைவர் பீட்டர் ப்ரூவர் தெரிவித்தார்.

ஸ்திரத்தன்மையை அடைவதிலிருந்து அரசாங்கத்தின் முழுப் பங்கேற்புடன் முழுமையான பொருளாதார மீட்சியை அடைவது வரை மற்றும் பொதுமக்களுடன் சீர்திருத்த செயல்முறையை தொடர்வதன் முக்கியத்துவத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

சிரமத்துடன் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை முன்னெடுத்துச் செல்லுமாறும், உரிய சீர்திருத்தங்களுக்கு கடுமையாக உழைக்குமாறும் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்படுவதாகவும், கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், கடன் மறுசீரமைப்பு விடயத்தில் இலங்கை வினைத்திறனான முன்னேற்றத்தை அடைந்துள்ளதாக தெரிவித்த சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தூதுக்குழுவின் தலைவர், இங்கிருந்து முன்னோக்கி நகர்ந்து நிலையான தன்மையை அடைவதே முக்கியம் என சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த இரண்டு ஒப்பந்தங்களும் நிறைவடையும் தருவாயில் உள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர், அடிப்படை நிதி மற்றும் சட்ட விவகாரங்கள் தொடர்பாக உத்தியோகபூர்வ கடனாளிகளின் இரு குழுக்களுடனும் அடிப்படை நிதி மற்றும் சட்ட விடயங்களில் உடன்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இலங்கை வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு திட்டத்தின் இலக்குகளை அடைவதே முன்னுரிமையாக இருக்க வேண்டும் என்பதுடன், அந்த இலக்குகளை அடைவது தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் இருக்கலாம் எனவும், அந்த இலக்குகளை எவ்வாறு அடைவது என்பது தொடர்பான யோசனைகளை கேட்க சர்வதேச நாணய நிதியம் தயாராக இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## புதிய சேவை யாப்புக்கு...

சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் அசோக்க பிரியந்த இதனைத் தெரிவித்தார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் அசோக்க பிரியந்த,

"தற்போது அரசாங்கம் "உறுமய" மற்றும் "அஸ்வெசும" உள்ளிட்ட பல முக்கிய திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. அத்துடன் கடந்த காலத்தில் நிறுத்தப்பட்ட பல அபிவிருத்தித் திட்டங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் மூலம் கிராமம் மற்றும் நகரங்களில் மீண்டும் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கு ஆதரவளிப்பது அரச அதிகாரிகளின் பொறுப்பாகும். எனவே மக்களுக்கான கடமைகளை நிறைவேற்ற முடியுமான இந்த சந்தர்ப்பத்தில் நாம் அனைவரும் நமது கடமையை செய்ய வேண்டும்.

இந்த அமைச்சை பொறுப்பேற்ற போது நாட்டில் பல பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன. ஆனால் நாம் தற்போது அரச சேவையை படிப்படியாக வலுப்படுத்தியுள்ளோம். அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்ய முடியாத நிலை காணப்பட்டது.

தற்போது 1,942 கிராம சேவை பிரிவுகளுக்கு கிராம உத்தியோகத்தர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் என்று இராஜாங்க அமைச்சர் அசோக்க பிரியந்த மேலும் தெரிவித்தார்.

## தெற்கு பிரதான கட்சிகளின்...

சிலர் தமது தனிப்பட்ட கருத்துகளை வெளியிட்டாலும், அது தமது கட்சியின் முடிவு அல்லவெனவும் அவர் கூறினார். தமிழ் பொது வேட்பாளர் தொடர்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு தொடர்பாக பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பாக தெற்கிலுள்ள பிரதான கட்சிகளிடம் எமது நிலைப்பாட்டை நாம் தெளிவாக எடுத்துக் கூறி வருகின்றோம். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, ஜே.வி.பி. யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் எம்மை சந்தித்து இப்போது பேசியிருக்கிறார்கள். அவர்களிடம் நாம் சில விடயங்களை அழுத்தம் திருத்தமாக கூறியிருக்கிறோம். தமிழ் பொது வேட்பாளர் தொடர்பாக தமிழரசுக் கட்சி இதுவரையும் எந்தவிதமான முடிவையும் எடுக்கவில்லை. இப்போது அதன் தலைவர் என்ற ரீதியில் நான் அதை பொறுப்புடன் கூறுகிறேன்.

எங்களை சந்தித்த தெற்கு அரசியல் கட்சிகளின் தலைவர்களிடம் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பில் நாம் சில கோரிக்கைகளை முன்வைத்திருக்கிறோம். சமஷ்டி கட்டமைப்பு முறையில் ஓர் அரசமைப்பு மாற்றத்தை கொண்டுவந்து ஒரு முழுமையான அதிகாரப்பகிர்வை வழங்கும் தீர்வு திட்டத்தை உங்களுடைய தேர்தல் அறிக்கைகளில் எந்த வித ஒளிவுமறைவுமின்றி வெளிப்படையாக, தெளிவாக முன்வைக்க வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறோம். அந்த அதிகாரப் பகிர்வு முறை எப்படி இருக்க வேண்டும் என்பதையும் அவர்களுக்கு விளங்கப்படுத்தியிருக்கிறோம். அவர்கள் இது குறித்து எங்களுக்கு இதுவரை எந்த உறுதிமொழியையும் வழங்கவில்லை. ஆனால் இந்த விடயத்தில் நாங்கள் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை என்பதையும் அவர்களுக்கு கூறியிருக்கிறோம்.

## தமிழ் பொது வேட்பாளராக...

தெரிவித்தார். அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் வேட்பாளராக முன்நிறுத்தப்பட கூடாதென்பதே.

வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் 45 சிவில் அமைப்புகளின் கூட்டணியான தமிழ் மக்கள் சபையின் தலைமையில் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி இம்முறை தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட வேண்டுமென்ற கலந்துரையாடல்கள் கடந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்டன. தமிழ் மக்கள் சபையின் தலைமையில் வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் கட்சிகளும் ஒருங்கிணைக்கப்பட்டு ஆழமான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ் மக்கள் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, புளொட் உட்பட பல்வேறு கட்சிகளும் அமைப்புகளும் இந்த கலந்துரையாடல்களில் கலந்துகொண்டன. தொடர்ச்சியாக இந்தக் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வரும் பின்புலத்திலேயே அனந்தி சசிதரன் தமிழ் பொது வேட்பாளராக களமிறங்க உள்ளதாக அறிவித்துள்ளார்.

என்றாலும், முன்னாள் பாராளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் அரசியல் பதவிகளில் இருந்தவர்கள் எவரும் தேர்தலில் களமிறக்கப்பட கூடாதென்ற நிலைப்பாட்டின் பிரகாரமே சிவில் அமைப்புகளின் கூட்டணியான தமிழ் மக்கள் சபை கலந்துரையாடல்களை நடத்தி வந்தது.

பேராசிரியர் ஒருவரை களமிறக்கும் அடிப்படையிலான கலந்துரையாடல்களும் இடம்பெற்றிருந்தன.

இவ்வாறு பேச்சுகள் தொடரும் சூழலில் அனந்தி சசிதரன், தாம் பொது வேட்பாளராக களமிறங்க உள்ளதாக எந்த பின்புலத்தில் அறிவித்துள்ளார் என்பது தொடர்பில் பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன.

## ஜூன் 18 முதல்...

அதற்கமைய இம்மாதம் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு பாராளுமன்ற கூடவுள்ளதுடன், மு.ப. 9.30 முதல் மு.ப. 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 5.00 மணிவரை சுற்றுலா பயணத்துறை சட்டத்தின் கீழ் 2348/38, 2352/47, 2352/48, 2360/62 மற்றும் 2360/63 ஆம் இலக்க விசேட வர்த்தமானிகளில் வெளியிடப்பட்டுள்ள ஐந்து கட்டளைகள், உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் 2308/27 ஆம் இலக்க விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள், முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மற்றும் விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் 2373/14 ஆம் இலக்க விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் என்பன விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. அதனையடுத்து பி.ப. 5.00 மணி முதல் 5.30 மணிவரை ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை (ஆளும் கட்சி) விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

ஜூன் 19ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 5.00 மணிவரை சீட்டாட்ட தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழ் 2366/33 மற்றும் 2369/42 ஆம் இலக்க விசேட வர்த்தமானிகளில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள், தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் தீர்மானம் மற்றும் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் 2381/24 ஆம் இலக்க விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

## தபால் ஊழியர்...

ரையாடிய போது எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

## கடனட்டை வட்டி வீதத்தை...

கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். நாடு தற்பொழுது செல்லும் பாதையை மாற்றினால் பாரதூரமான பொருளாதார பாதிப்புகள் ஏற்படக்கூடுமெனவும் சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளதாக ஆசு மாரசிங்க எம்.பி. தெரிவித்துள்ளார்.

## 13ஐ நிராகரித்தமையே...

போராட்டத்தை முன்னெடுத்திருந்தோம். அந்த போராட்டம் 1987 களில் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் தேவையற்றதாக மாறி விட்டது. இதேநேரம் சிலரது தவறான வழிநடத்தல்களால் ஆயுதப் போராட்டமும் திசைமாறி சென்று விட்டது.

இந்த சூழலை கருத்திற்கொண்டே நான் 13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற மாகாண சபை முறைமையே தமிழர் பிரச்சினைக்கான தீர்வுகளை எட்டுவதற்கான ஆரம்பப் புள்ளியாகும். இதை ஏற்று அதன் வழி சென்று எமது இலக்கை எட்டலாம் என அனைத்து தரப்பினருக்கும் அழைப்பு விடுத்தும் வந்திருக்கிறேன். ஆனால் அவர்கள் எனது கருத்தை அன்று ஏற்றிருக்கவில்லை.

13ஆவது திருத்தம் என்ற வடிவில் பொன்னான வாய்ப்பை ஈழமக்கள் ஜனநாயக கட்சியாகிய எம்மை தவிர தமிழ் தரப்பிலிருந்த ஏனைய அனைவரும் நிராகரித்திருந்தனர். ஆனால் நாம் தான் அதை தொடர்ந்தும் வலியுறுத்தி வந்து கொண்டிருக்கின்றோம். அதுவே தற்போதைய நிலையில் நடைமுறை சாத்தியமாகவும் உள்ளது.

இந்நிலையில் சில நாட்களுக்கு முன்னராக தென்னிலங்கையில் குறிப்பாக வரவுள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச மற்றும் அநுரகுமார திஸநாயக்கா ஆகியோர் வருகை தந்து சென்றுள்ளனர். அவர்களிடம் இன்று அனைத்தும் கைமீறிச் சென்றுவிட்ட நிலையில் 13ஆவதில் பாதியா அல்லது கால்வாசியா என பேசிக்கொண்டிருக்கின்றனர் ஆனால் அது எமது கைகளில் ஏற்கனவே இருக்கின்றது. அதை கைநழுவ விட்டுவிட்டு மருந்துக்குத்தான் வலி என்றிருந்ததே இன்று இந்த சாபக்கேடான நிலைக்கு காரணமாகும். இதே நேரம் இன்றாவது நாம் கூறிய வழிமுறைக்கு ஏனைய தரப்பினரும் வந்துள்ளனர் என கருதினாலும் அதிலும் அவர்களிடம் உண்மை இருக்காது என்றே எண்ணத் தோன்றுகின்றது. இதேநேரம் அதளபாதாளத்தில் வீழ்ந்திருந்த நாட்டை பொறுப்பெற்று அதை படிப்படியாக முன்னேற்றம் காண செய்துகொண்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் நடவடிக்கைகளும் செயற்பாடுகளும் சரியானதாகவே இருக்கின்றது என நான் எண்ணுகின்றேன். இதை நான் பல சந்தர்ப்பங்களிலும் பொது வெளியில் பகிரங்கமாக கூறி வருகின்றேன். அதனால் இன்னும் சில காலங்களுக்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதை முன்னெடுத்துச் செல்ல சந்தர்ப்பம் கொடுப்பது சிறந்தது என்றே எண்ணுகின்றேன். அதுவே நாட்டுக்கு மட்டுமல்லாது தமிழ் மக்களுக்கும் நன்மையாக அமையும் என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை தமிழ் தலைவர்கள் அல்லது பிரதிநிதிகள் என்று கூறும் தரப்பினர் பிரச்சினையை தீரா பிரச்சினையாக வைத்திருக்க வேண்டும் என நினைத்தே ஒவ்வொரு நகர்வுகளையும் முன்னெடுக்கின்றனர். யாராக இருந்தாலும் அதாவது இலங்கை அரசாகவோ அற்றி இந்திய அரசாகவோ இருந்தாலும் அவர்கள் தத்தமது நலன்களிலிருந்தே எந்தவொரு பிரச்சினையையும் அணுகுவார்கள். அதுதான் நியதியும் கூட. அதனால் நாம் அவர்களை நம்பிக்கொண்டிராது எமக்கு கிடைக்கின்ற வாய்ப்புகளை "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்பதுபோல சரியாக பயன்படுத்திக் கொள்வதே முக்கியமானதாகும்.

## புதிய பொருளாதார...

பயனர்களை வழிநடத்தும் ஒரு தளமாகும். இந்த தளமானது ரீஜண்ட் குளோபல் நிறுவனத்தால் (Regent Global) இயக்கப்படுவதோடு, இலங்கையில் இதனை அறிமுகப்படுத்த இங்கிலாந்தில் உள்ள புலம்பெயர் இலங்கையர்களால் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இலங்கை இளைஞர் சமூகத்தினருக்கான பொதுக் கற்றல் தளத்தை (http://www.publiclearn.lk/) ஜனாதிபதி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, புதிய பொருளாதார மாற்றத்திற்காக இலங்கை டிஜிட்டல் மயமாக்கலுடன் வேகமாக முன்னேற வேண்டும் என்று தெரிவித்தார். மஹிந்த தேரரின் வருகையுடன் பிறந்த இலங்கையின் கல்வியானது படிப்படியாக 03 நிலைகளின் கீழ் பரவியதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இன்று டிஜிட்டல் மயமாக்கலுடன் திறந்த தளத்தில் அறிவைப் பகிரும் நிலைக்கு முன்னேறியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந்த நன்மையை இலங்கை மக்களுக்கு கிடைக்க செய்தமைக்காக ரீஜண்ட் குளோபல் நிறுவனத்தின் (Regent Global)கலாநிதி செல்வ பங்கஜ் உள்ளிட்டோருக்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கூறியதாவது:

"இலங்கை மக்களுக்கு இந்த பயனை பெற்றுக் கொடுத்தமைக்காக முதலில் கலாநிதி செல்வ பங்கஜ் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இன்று நாம் அறிவு நிறைந்த சமூகத்தில் வாழ்கிறோம். அந்தச் சமூகத்தில் போட்டித்தன்மையுடன் முன்னேறுவது அவசியம். கல்வியில் நாம் முன்னணி நாடாக இருப்பதால் இது கடினமான காரியம் அல்ல என்று நான் நம்புகிறேன்.

தற்போது கல்வித்துறையில் உள்ள குறைபாடுகளை சீர்செய்யும் பணியில் ஈடுபட்டு வருகிறோம் . இந்த புதிய திட்டம் அதற்கு நல்ல பங்களிப்பை வழங்கும்.

கலாநிதி கெவின் அத்தகைய திட்டத்தின் முக்கியத்துவத்தையும் அதன் நோக்கங்களையும் நன்கு விளக்கினார்.

எவ்வாறாயினும், ஒரு புதிய பொருளாதார மாற்றத்திற்கான நமது அணுகுமுறையில் மாற்றம் தேவை. நிச்சயமாக நம்மால் அதனை சாதிக்க முடியும். எதிர்காலத்தில் வகுப்பறைகள் மற்றும் சுவர்கள் இன்றி பாடசாலைக்கு வெளியிலான கற்றல் வாய்ப்புகள் குறித்து கவனம் செலுத்த வேண்டியிருக்கும். அவ்வாறான திட்டமே இன்று தொடங்குகிறது.

வகுப்பறைகளில் திறமையான மற்றும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களின் பற்றாக்குறை சவாலை சமாளிக்க இது ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

மேலும், இந்த வேலைத்திட்டம் இலங்கை மக்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கும், நாட்டில் டிஜிட்டல் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் எனக்கு ஒரு தனித்துவமான வாய்ப்பாக இருக்கும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

# இரண்டாம் நாள் கம்பன் விழாவில்...





கொழும்புக் கம்பன் கழகத்தின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று நடைபெறவுள்ளன. இந்நிலையில் காலை விழாவை மு.ப. 9.30 மணிக்கு இசை ஆசிரியர் ஹம்சானந்தி தர்மபாலன் கடவுள் வாழ்த்து இசைத்து ஆரம்பித்து வைக்கிறார்.

மனவளக்கலை அமைப்பின் பேராசிரியர் சி.முருகானந்தவேள் தலைமை உரையையும் தமிழக 'கற்க' அறக்கட்டளை பொறுப்பாண்மை குழுவின் தலைவர் எஸ்.செந்தில்குமார் தொடக்க உரையையும் ஆற்றவுள்ளனர்.

முதலில் 'எங்கள் கம்பன்' எனும் தலைப்பில் கலாநிதி ஆறு. திருமுருகன் தனியுரை ஆற்றவுள்ளார். தொடர்ந்து புகழ் பெற்ற பேச்சாளர் பாரதி பாஸ்கர் தலைமையில் 'பெரிதும் இதயந் தொடும் புலம்பல்' எனும் பொருளிலான விவாத அரங்கு நடைபெறவுள்ளது. இந்த அரங்கில் லோ.துஷிகரன், த.சரவணச்செல்வன் (தமிழ்நாடு), அ.வாசுதேவா, கு.பாலசண்முகன், சி.கேசவன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

மாலை விழாவை பி.ப. 5.30 மணிக்கு மாருதி மணி எக்ஸ்சேஞ்ச் அதிபர் க.ரவீந்திரன் தம்பதியர் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பர். இதன் போது இசை ஆசிரியர் த.கருணாகரன் கடவுள் வாழ்த்து இசைப்பார்.

நாவலர் விருதாளர் தமிழகத்தை சேர்ந்த சிவாலயம் ஜெ.மோகன் தலைமை உரையையும் கொழும்பு சைவமங்கையர் கழகத்தின் முகாமையாளர் செல்வி மாலா சபாரத்தினம் தொடக்க உரையையும் ஆற்றவுள்ளனர்.

மாலை அரங்கின் முதல் நிகழ்ச்சியாக கவியரங்கு இடம்பெறவுள்ளது. கலாநிதி பாரதி கிருஷ்ணகுமார் தலைமையில் இக்கவியரங்கு நடைபெறவுள்ளது.


இந்நிகழ்ச்சியில் அலி அக்பர், த.ஜெயசீலன், ச.முகுந்தன், உமாகரன் இராசையா, வ.வடிவழகையன் ஆகியோர் கலந்துகொண்டு கவி வழங்கவுள்ளனர். சிறப்பு நிகழ்ச்சியாக இன்று சந்திக்கும் இவர்கள் எனும் புதுமையான நாடக அரங்கு இடம்பெறவுள்ளது. இதில் கம்பராக கம்பவாரிதி இ.ஜெயராஜ் கலந்து கொள்கிறார்.

# இன்றைய பலன்கள்

### (15.06.2024)



**கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா**
**(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)**




**மேஷம் :** சுப செலவுகள் அதிகரிக்கும். பணப்பற்றாக்குறை ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு.



**ரிஷபம் :** கணவன் மனைவி ஒற்றுமை பலப்படும். பெற்றோர் உடல் நலனில் கவனம் தேவை. வாரிசுகளின் வளர்ச்சி மகிழ்ச்சி தரும்.



**மிதுனம் :** குடும்ப ஒற்றுமை பலப்படும். தொழில் முன்னேற்றம் உண்டு. கடன் சுமை குறையும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள்.




**கடகம் :** பெண்களுக்கு குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். கணவன் மனைவி இருவரும் விட்டுக் கொடுத்துச் செல்வது நன்மை தரும். பணம் வந்த மறுநிமிடமே செலவாகிவிடும்.




**சிம்மம் :** பெண்களுக்கு மனக்கலக்கம் அதிகரிக்கும். தொழில் கூட்டாளிகளால் பிரச்சினை வரலாம். ஆதாயம் குறைவாகவும் அலைச்சல் கூடுதலாகவும் இருக்கும்.



**கன்னி :** பெண்களுக்கு அதிக விரயம் உண்டு. நிம்மதி குறையும். தொழிலைப் பொறுத்தவரை யாரை நம்பியும் எதுவும் செய்ய இயலாது. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள்.




**துலாம் :** குடும்ப விஷயங்களை மூன்றாம் நபரிடம் சொல்ல வேண்டாம். இடமாற்றம், வீடு மாற்றம் ஏற்படும் பணி புரிபவர்களுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும்.



**விருச்சிகம் :** உங்களின் திறமைக்கு ஓர் அங்கீகாரம் கிடைக்கும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். குடும்பத்தில் குழப்பத்தை ஏற்படுத்தியவர்களை கண்டறிந்து ஒதுக்குவீர்கள்.



**தனுசு :** யாரேனும் உங்களுடைய தவறுகளை சுட்டிக் காட்டினால் மாற்றிக் கொள்வது நல்லது. தவறு செய்யாமலேயே நீங்கள் தவறு செய்தாக சிலர் வீண் பழி சுமத்துவார்கள்.



**மகரம் :** தந்தையாருக்கு சின்ன அறுவை சிகிச்சை, மூச்சுத் திணறல், வாயுக் கோளாறால் நெஞ்சு வலி வந்துப் போகும். எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறை இருந்துக் கொண்டேயிருக்கும்.



**கும்பம் :** விட்டுக் கொடுத்து போவது நல்லது. அனுமதி பெறாமல் வீடு கட்டத் தொடங்க வேண்டாம். தாயாரின் உடல் நிலை பாதிக்கும். மனத்தாபங்களும் வந்து நீங்கும்.



**மீனம் :** கணவன் மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். சிலர் தனிக் குடித்தனம் செல்வீர்கள். திருமணம் தள்ளிப் போனவர்களுக்கு நல்ல விதத்தில் முடியும்.

## அமைச்சர் விஜேயதாசவுக்கு...

எதிர்வரும் 28ஆம் திகதி வரை நீடிக்குமாறு கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி சாமரி வீரசூரிய நேற்று (14) உத்தரவிட்டுள்ளார்.

துமிந்த திசாநாயக்கவினால் சரத் ஏக்கநாயக்க, கீர்த்தி உடவத்த மற்றும் விஜேயதாச ராஜபக்ச உள்ளிட்டோரை பிரதிவாதிகளாக குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மேலதிக மாவட்ட நீதிபதி இந்த தடை உத்தரவை நீடிப்பதற்கான உத்தரவை பிறப்பித்தார்.

## பெருந்தோட்ட தொழில்துறைக்குள்...

வினைத்திறன் குறைதல் மற்றும் தோட்டங்கள் உற்பத்தியில் சரியான மட்டத்தை எட்டாமை உள்ளிட்ட எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெருந்தோட்ட நிறுவன மறுசீரமைப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வில் ஊடகவியலாளர் மத்தியில் இந்த வியங்களை அமைச்சர் குறிப்பிட்டார்.

## 01 மில். அமெ. டொலர்களுடன்...

யளவில் மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களை திடீரென வழிமறித்து சோதனைக்கு உட்படுத்திய போது 01 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இருந்ததுடன், அமெரிக்க டொலர்களை மாற்றுவதற்கான சான்றுப் பொருட்களும் இவர்களிடம் காணப்பட்டன. இதனைத் தொடர்ந்து இந்த 03 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## நாட்டின் பொருளாதாரத்தின்...

2022ஆம் ஆண்டு காணப்பட்ட சமூக கட்டமைப்புக்கும் தற்போதைய நிலவரத்துக்குமிடையில் வேறுபாடுகள் காணப்படுவதாகவும் பொருளாதார மீட்சிக்காக முன்னெடுத்த தீர்மானங்களினால் நாட்டு மக்கள் குறுகியகால நெருக்கடிகளை எதிர்கொண்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தேசிய அடையாள அட்டையில்...

முதலில் இந்த அடையாள அட்டை வழங்கப்படுமென ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்திரி தெரிவித்துள்ளார். அதற்கமைய தற்போது தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் பாடசாலை மாணவர்களுக்கு உறுதிப்படுத்தல் கடிதம் மட்டுமே வழங்கப்படுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நகர்வலம்



## பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு மேலதிக பஸ் சேவைகள்

*திறப்பனை தினகரன் நிருபர்*

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு இம்முறை அநுராதபுரம், மிகிந்தலை, தந்திரிமலை ஆகிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களுக்கு நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வருகை தரும் பக்தர்களின் வசதி கருதி மேலதிக பஸ் சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

மாஹோ தொடக்கம் அநுராதபுரம் வரையிலான புகையிரத வீதியின் புனரமைப்பு வேலைகள் தொடர்ந்து இடம் பெறுவதால் கூடுதலான பஸ்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

நாட்டின் பிரதான நகரங்களில் இருந்து வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களுக்கு இக் குறிப்பிட்ட பஸ் சேவைகள் இடம் பெறும் என இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

வட மத்திய வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களில் இருந்து சுமார் 400 க்கும் மேற்பட்ட பஸ்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு



*பேருவளை பீ.எம்.முக்தார்*

களுத்துறை மாவட்டத்திலுள்ள வியங்கல்லை பகுதி அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்காக பேருவளை சீனன் கோட்டை பகுதி வாழ் மக்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட உலர் உணவுப்பொதிகள் வியங்கல்லை ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகிகளிடம் (1062024)உத்தியோகபூர்வமாக சீனன்கோட்டை பிரமுகர்களினால் கையளிக்கப்பட்டது. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 550 குடும்பங்களுக்கு இதன் போது உலர் உணவு பொதிகள் பள்ளி வாசல் நிர்வாகிகளான எச்.எம். எம்.ரியாஸ் மற்றும் எம்.ஐ.எம். இஷாக் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டது.

வெள்ளம் ஏற்பட்ட கடந்த 2ம் திகதி முதல் சீனன்கோட்டை பகுதியைச் சமூக சேவையாளர்கள் குழுவினர் வியங்கல்லைக்கு விரைந்து சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவுகளை இரவு பகல் என வழங்கியதோடு நிவாரணப் பணிகளிலும் ஈடுபட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு படகு மூலமும் சென்று இவர்கள் உதவிக் கரம் நீட்டியுள்ளனர்.

இவர்களின் தியாகமிகு சேவைகளுக்கும், உலர் உணவு பார்சல்கள், சமைத்த உணவுகளை உடனுக்குடன் பெற்றுக் கொடுத்த சினன்கோட்டை வாழ் மக்களுக்கு வியங்கல்லை வாழ் மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

## மிஹிந்தலைக்கு வரும் சந்தேகத்திற்கிடமான நபர்கள் தொடர்பில் விசாரிக்க பணிப்பு

*அநுராதபுரம் தினகரன் நிருபர்*

பொசன் விழாவிற்காக மிஹிந்தலை பகுதிக்கு வரும் சந்தேகத்திற் கிடமான நபர்கள் தொடர்பாக விரிவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனினால் வடமத்திய மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீர சூரியவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இன்னும் ஒருசில தினங்களில் மிஹிந்தலை நகரில் இடம்பெறவுள்ள பொசன் விழாவினை குழப்புவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதாக கூறி மிஹிந்தலை ரஜமஹா விஹாரையின் விஹாராதிபதி பேராசிரியர் வலவா ஹெங்குணவெவ தம்மரத்ன தேரர் பொலிஸ் மா அதிபர் தென்னகோனிடம் விடுத்த வேண்டுகோள்களுக்கு இணங்க பொலிஸ் மா அதிபர் இந்த உத்தரவினை விடுத்துள்ளார் .

அண்மையில் மிஹிந்தலை பகுதியில் கைதான பெண் சந்தேக நபர் உள்ளிட்ட ஏழுபேர் கைதான விடயத்தினை முன்வைத்தே மிஹிந்தலை விஹாராதிபதி பொலிஸ் மா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## நிட்டம்புவயில் " ஐஸ் " போதைப்பொருள் பாவித்ததாக 14 பேர் கைது

### சந்தேகநபர்கள் 19 வயதுக்கும் 27 வயதுக்கும் உட்பட்டவர்கள் என தெரிவிப்பு

*நீர்கொழும்பு தினகரன் நிருபர்*

நிட்டம்புவ பொலிஸ் பிரிவிலுள்ள வதுபிடிவெல, பெஹெத்வத்த தோட்டத்தில் கம்பஹா வலயக் குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பின் போது " ஐஸ் " போதைப்பொருள் பாவித்த 14 பேரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

இந்த சந்தேக நபர்கள் 19 வயதுக்கும் 27 வயதுக்கும் உட்பட்டவர்கள் என பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

கம்பஹா வலயக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் இந்த சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

கம்பஹா வலயக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் கோஸல லியனாராய்ச்சியின் ஆலோசனைக்கு இணங்க மேலதிக விசாரணைகளுக்காக சந்தேக நபர்களை நிட்டம்புவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர்களுடன் தொடர்பு கொண்டுள்ள நபர்களையும் தேடி பொலிஸார் வலை விரித்துள்ளனர். குறித்த சந்தேக நபர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகளையும் பொலிஸார் மேற் கொண்டுள்ளனர்.

## ஈதல்வெடுனுவெவ முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு புதிய வகுப்பறைகள்







*அநுராதபுரம் மேற்கு தினகரன், திறப்பனை தினகரன் நிருபர்கள்*

கலென்பிந்துனுவெவ கல்வி வலயத்திற்குட்பட்ட ஈதல்வெடுனுவெவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நான்கு வகுப்பறைகளைக் கொண்ட கட்டிடம் (09) திறந்து வைக்கப்பட்டது.

அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமானின் வேண்டுகோளுக்கிணங்க அல் ஹிமா இஸ்லாமிய சமூக சேவைகள் அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்ஹ் எம்.ஏ.ஏ.நூருல்லாஹ் (நளிமி) யின் முயற்சியினால் குவைத் நாட்டின் நன்கொடையில் இப்புதிய கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. நான்கு வகுப்பறைகளைக் கொண்ட மாடிக்கட்டிடத்தின் திறப்பு விழா வித்தியாலய அதிபர் ஏ.சி. அமீன் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது குவைத் நாட்டின் இலங்கை தூதரக பிரதிநிதி எம். பிரதர்ஸ் , தமிழ்ப் பிரிவு வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.நவாஸ், கல்விசார் அதிகாரிகள், ஊர் பிரமுகர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இதன் போது லசித் மாலிங்கவின் பந்து வீச்சு பாணியில் பந்து வீசும் முஹமட் பைனாஸ் இங்கு பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

## கொழும்பு உம்மு ஸாவியாவில் உலமாக்களுக்கான கலந்துரையாடல்





கொழும்பு உம்மு ஸாவியாவில் பாணந்துறை தொட்டவத்தையைச் சார்ந்த சாதாரண தரப் பரீட்சை (O/L), உயர்தரப் பரீட்சை (A/L) எழுதிய மாணவர்கள் மற்றும் உலமாக்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் அகீதா சம்பந்தமான விடயங்களும், தொழில் மற்றும் அறிவியல் வளர்ச்சிக்கான ஆலோசனைகளும் கலந்துரையாடப்பட்டன. பாணந்துறை தொட்டவத்தை ஷாதுலிய்யா மாணவர் அமைப்பு மற்றும் உம்மு ஸாவியாவின் நிர்வாகத் தலைவர் ஹாஷின் வழிகாட்டலின் கீழ், உம்மு ஸாவியாவின் நிர்வாக சபை ஆகியன இதனை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

உம்மு ஸாவியாவில் இயங்கும் அஜ்வாத் அல் பாஸி அரபுக் கல்லூரி முதல்வர் கலீபதுஷ் ஷாதுலி அல் உஸ்தாத் அஹ்மத் ஸூபி (மஹ்ழரி), இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் செய்தி ஆசிரியர் பஸ்ஹான் நவாஸ் ஆகியோர் இக்கருத்தரங்கில் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

## ஜனரஞ்சகப் பாடகர் கலைஞர் கலைக்கமலின் " கீத்ராத் 61 "



**தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையில் "ஜனரஞ்சகப் பாடகர் கலைஞர் கலைக்கமலின் " கீத்ராத் 61 " எதிர்வரும் ஜூலை மாதம் 07 ஆம் திகதி மாலை 7 மணிக்கு கொழும்பு 7 ஜே.ஆர். ஜெயவர்த்தன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.**

**பிரபல இசைக் கலைஞர்கள் பஸால் ஜின்னாஹ், அயாஸ் சவாஹிர், ஹாரிஸ் மாஸ்டர், சுப்பர் டியூனர்ஸ் பௌமி, அஸார் கௌஸ் இசையில் கலைக்கமலுடன் சிறப்புப் பாடகராக சிங்கப்பூர் பிரபல கலைஞர், சுங்கத் திணைக்கள அதிகாரி ஹாஜி ப:ரிஹூல்லாஹ், பிரபல பாடகி மொறின் ஜெனற் இணைந்து பாடவுள்ளனர். தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் தலைமையில் பிரபல தொழிலதிபர், சமூகசேவையாளர் ALLIED TRADING INTERNATIONAL (PVT) LTD இப்திகார் அஹ்மத் , RANAR MIGRATION CENTER இயக்குநர் முஹம்மத் நஸீர் முன்னிலையில் நடைபெறவுள்ளது.**

பிரபல வானொலி அறிவிப்பாளர் கவிதாயினி கலையழகி வரதராணி நிகழ்ச்சியை தொகுத்து வழங்குவார். இசையபிமானிகள் இலவசமாக பார்த்து ரசிக்கலாம்.

# சர்வதேச யோகா தினம் அனுஷ்டிப்பு

**(காவத்தை தினகரன் விசேட நிருபர்)**

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு சப்ரகமுவ மாகாண யோகா பயிற்சி நிகழ்வு நேற்றையதினம்(13) சப்ரகமுவ மாகாண ஆளுநர் சிரேஷ்ட சட்டத்தரணி நவீன் திசாநாயக்க மற்றும் இந்திய உதவி உயர்ஸ்தானிகர் கலாநிதி எஸ்.ஆதிரா ஆகியோர் தலைமையில் கேகாலை நகரசபை உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதன்போது சிரேஷ்ட சட்டத்தரணி நவீன் திஸாநாயக்க, சப்ரகமுவ மாகாண ஆளுநராக பதவியேற்று (13) ஓராண்டு நிறைவடைந்ததை முன்னிட்டு, சப்ரகமுவ பல்கலைக் கழகத்திற்கு வைத்திய உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், பாடசாலைகளுக்கான கணினி மற்றும் உபகரணங்கள், இசைக்கருவிகள் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன் இந்திய அரசின் உதவியுடன் பாடசாலை மாணவர்களுக்கு ஹிந்தி மொழி கற்றல் தொடர்பான புத்தகங்கள் மற்றும் கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

சர்வதேச யோகா தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 21 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது.

மேற்படி யோகா பயிற்சி முகாமில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் சிரேஷ்ட சட்டத்தரணி நவீன் திசாநாயக்க, இந்திய உதவி உயர்ஸ்தானிகர் கலாநிதி எஸ். ஆதிரா, சப்ரகமுவ மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் சுஜீவா போதிமான்ன மற்றும் இரத்தினபுரி கேகாலை மாவட்ட பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி

**(அக்குறணை குறூப் நிருபர்)**

கண்டி பதியுதீன் மஃமூத் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி கண்டி போகம்பறை விளையாட்டு மைதானத்தில் அதன் அதிபர் நதீரா இஸ்மாயீல் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தேசிய கெடட் குழு அலுவலக உத்தியோகத்தர் லெப்டினல் கேணல் எம். டப்லியூ. டி. எம். குமாரி பண்டார, கண்டி கல்வி வலய தமிழ் மொழி பிரிவுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் நூருல் அமீன், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஹிதாயத் சத்தார், கண்டி மாநகர சபை முன்னாள் அங்கத்தவர் அஸ்மி மரிக்கார் உட்பட பலர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

## மிளகு பறித்துக் கொண்டிருந்தவர் தவறி வீழ்ந்து மரணம்



பிபில பிரதேசத்தில் வசிக்கும் மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் மிளகு பறித்துக்கொண்டிருக்கும் போது தவறி விழுந்து உயிரிழந்துள்ள சம்பவம் அண்மையில் இடம் பெற்றுள்ளது .

பிபில பதுள்ளகம்மன பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய டி.எம்.விமலசிறி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் ஏணியில் ஏறி, மரமொன்றில் இருந்த மிளகு கொடியிலிருந்து மிளகு பறித்துக்கொண்டிருந்த போது ஏணி கவிழ்ந்ததில், கீழே விழுந்து காயமடைந்து பிபில ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

## ஏரியில் விழுந்து சிறுவன் உயிரிழப்பு

அத்திமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோரா அத்துப்பிட்டிய ஏரியில் தாமரை பூ பறிக்க சென்ற பாடசாலை மாணவரொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ள சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

அத்திமலை மகா வித்தியாலயத்தின் 04 வகுப்பில் கல்வி கற்கும் கொவிப்பொல வீதியை சேர்ந்த மதிஷ தேனுவன் (வயது 9) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சிறுவன் பாடசாலை முடிந்து, தனது நண்பர்கள் மூவருடன் தாமரை பறிப்பதற்காக ஏரிக்கு சென்றுள்ளார். அப்போது வறட்சி காலத்தில் தண்ணீர் எடுப்பதற்காக ஏரியின் நடுவே வெட்டப்பட்ட கிணற்றில் தவறி விழுந்து நீரில் மூழ்கியுள்ளார்.

சிறுவனுடன் வந்த நண்பர்கள் இச்சம்பவம் தொடர்பில் எவருக்கும் தெரிவிக்காத நிலையில், மாலை 5.45 மணியளவில் சிறுவன் வீட்டுக்கு வராமையால் அவனது தந்தை சிறுவனை தேடியுள்ளார்.

அப்போது சிறுவன் ஏரியை நோக்கி சென்றதை கண்டதாக அக்கம் பக்கத்தினர் தெரிவித்துள்ளனர். அங்கு சென்று பார்த்த போது, சிறுவன் ஏரியின் நடுவிலுள்ள கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளார்.

அவரை உடனடியாக அத்திமலை பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதிலும், சிறுவன் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை அத்திமலை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

ஹற்றன் நோட்டன் பிரதான

## வீதியில் விபத்து ஒருவர் படுகாயம்

**(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)**

ஹற்றன் நோட்டன் பிரதான வீதியின் வனராஜா பகுதியில் இரு முச்சக்கரவண்டி நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் காயமடைந்ததாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் டிக்கோயாவிலிருந்து காசல் ரீ பகுதியை நோக்கி சென்ற முச்சக்ர வண்டியும் சவுத் வனராஜா பகுதியிலிருந்து ஹற்றன் நோக்கி சென்ற முச்சக்கரவண்டியும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

அதிக வேகமே விபத்துக்கான காரணமென பொலிஸார் தெரிவித்தனர். விபத்துக்குள்ளான இரு முச்சக்கர வண்டிகளும் கடும் சேதத்துக்குள்ளானதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

மலைச்சாரல்

# சிசுவின் சடலம் மீட்பு

**(நானுஓயா நிருபர்)**



நுவரெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுவரெலியா பொரலந்த பகுதியில் பிறந்து சில நாட்களேயான சிசுவொன்றின் சடலமொன்று இன்று (13) மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா நிலையத்திற்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தினை மீட்டுள்ளனர். சிசு யாருடையது என இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

குறித்த சிசுவின் சடலம் முழுவதும் சிதைவுண்ட நிலையில் காணப்படுவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றன.

நுவரெலியா பதில் நீதவான் ஜயமினி அம்பகஹவத்த விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் சிசுவின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்ட சிசுவின் தாயைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் உதவியுடனும் இப்பகுதியில் உள்ள பிரதேச தாதியர்களின் உதவியுடன் பொலிஸார் ஈடுபட்டுள்ளதுடன் மேலதிக விசரணையை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சுகாதார பாதுகாப்பு வேலைத்திட்டம்

மலையக மக்களின் சுகாதார பாதுகாப்பு மற்றும் முன்னேற்றத்திற்காக "சதுடு வது" எனும் சந்தோஷமான தோட்ட மண் (Happy Estate) வேலை திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தினமும் அதிகரிக்கும் சுகாதார செயல்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தி 30 வருடங்கள் சீர்திருத்தம் இடம்பெறாத பணிமனையில் ஆரம்பிக்கப்பட்டது.

பெருந்தோட்ட கைத்தொழில் துறைக்கு பாரிய பங்களிப்பை வழங்கும் தோட்ட மக்களின் சுகாதார பாதுகாப்பிற்காக சுகாதார மற்றும் கைத்தொழில்அமைச்சர்வைத்தியர்ரமேஷ் பத்திரணவின் ஆலோசனைக்கு இணங்க சுகாதார செயலாளர் கோட்பாட்டின் படி நடைமுறைப்படுத்தப்படும் இவ்வேளை திட்டம் சுகாதார ஊக்குவிப்பு அலுவலகத்தின் முழுமையான முயற்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன் போது தோட்ட மக்களின் சுகாதார பிரச்சினைகளை அடையாளம் கண்டு உடல், உள, சமூக , ஆன்மீக முன்னேற்றத்தை ஏற்படுத்தி அவர்களின் அறிவு பண்பாடு திறமைகளை விருத்தி செய்து , ஆரோக்கியமான மக்களாக பலவலுப்படுத்தும் நோக்கில் இவ்வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கேகாலை மாவட்டத்தை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ் "சதுடு வது" நோக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முதற்கட்டமாக இச்செயற்பாடு மேற்கொள்ளப்படுவதுடன், நாடு முழுவதும் உள்ள 460 தோட்டங்களில் 45 தோட்டங்கள் இவ்வேளை திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அவற்றில் ஏழு தோட்டங்கள் கேகாலை மாவட்டத்தில் அமைந்துள்ளன. அது தவிர நாட்டின் ஐந்து மாகாணங்களில் 11 மாவட்டங்களின் நூற்றுக்கு 5 வீதமானவர்கள் அதாவது மொத்த ஜனத்தொகையில் ஒரு மில்லியன் அளவில் தோட்டப் பகுதி மக்களாகக் காணப்படுகின்றனர்.

இதன்போது கருத்தை தெரிவித்த சுகாதார அமைப்பின் செயலாளர் விசேட வைத்தியர் பாலித்த மகைப்பாளர் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்போதைய வேலை திட்டத்தின் கீழ் ஆறு மாத காலங்களுக்குள் அகல தோட்டங்களிலும் காணப்படும் நிலைமைகளில் மாற்றத்தை காணலாம் என்று குறிப்பிட்டார்.

## தினக்குரல் முன்னாள் உதவி செய்தி ஆசிரியரின் தந்தை காலமானார்

இறுதிக் கிரியைகள் நாளை



தினக்குரல் முன்னாள் உதவி செய்தி ஆசிரியரும் பாராளுமன்ற செய்தியாளரும் அமெரிக்க தூதரக அதிகாரியுமான டிட்டோ குகனின் அன்புத் தந்தை அழகன் அய்யாக் கண்ணு, தனது 80 ஆவது வயதில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை காலை 09 மணிமுதல் இரவு 10 மணி வரையும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 09 மணி முதல் காலை 11.30 மணி வரையும் இல ;292, வைத்தியசாலை வீதி, களுபோவிலையிலுள்ள ஜயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு கொஹுவலை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

# வடக்கின் உதயம்

பாசையூர்

## புனித அந்தோனியார் ஆலயப் பெருவிழா

**(யாழ்.விசேட நிருபர்)**



யாழ்ப்பாணம் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயப் பெருவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

பெருவிழாவில் பதுவைப் புனிதரான அந்தோனியார் தேரில் ஏறி வீதி உலா வந்து பக்தர்களுக்கு ஆசி வழங்கினார். இந்நிகழ்வில் நூற்றுக் கணக்கான பக்தர்கள் அந்தோனியாரை தரித்து ஆசி பெற்றனர்.

## வடக்கில் மூன்று மாவட்டங்களில் திருட்டில் ஈடுபட்ட மூவர் கைது

பல இலட்சம் பெறுமதியான நகைகளும் மீட்பு

**(வவுனியா விசேட நிருபர்)**

வடக்கின் மூன்று மாவட்டங்களிலுள்ள 6 இடங்களில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் மூவர் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து பல இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, குருமன்காடு பகுதியிலுள்ள வீட்டை உடைத்து ரூ.5 இலட்சம் பெறுமதியான நகைகளும், தொலைபேசி ஒன்றும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் திருடப்பட்டிருந்தன. இதுதொடர்பாக வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவில் பாதிக்கப்பட்டவரால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைவாக தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயக்கொடி வழிகாட்டலில் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏம்மந்த தலைமையில் இச்சுற்றிவளைப்பு நடைபெற்றது.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் வடக்கின் மூன்று மாவட்டங்களில் 6 இடங்களில் திருட்டில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளதுடன், பல இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

வவுனியா, புளியங்குளம் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து ரூ.10 இலட்சம் பெறுமதியான நகைகளும், புளியங்குளத்தில் பிறிதொரு வீடு உடைத்து கிரேண்டர், மடிக்கணினி, உள்ளிட்ட பொருட்களும் சந்தேகநபர்களால் திருடப்பட்டுள்ளன.

மேலும், மன்னார் பகுதியில் வீடு உடைத்து 5 இலட்சம் பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளதுடன், மன்னார், பேசாலைப் பகுதியில் 3 வயது பிள்ளை அணிந்திருந்த ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலியும் அறுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தின் சாவகச்சேரி பகுதியில் மோட்டார் சைக்கிள் இந் நபர்களால் திருடப்பட்டுள்ளது. திருடப்பட்ட நகைகள் வவுனியாவிலுள்ள தனியார் நிறுவனங்களில் அடைவு வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளதுடன், ஏனைய திருடப்பட்ட பொருட்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

## கேரள கஞ்சா மீட்பு

**(கரவெட்டி தினகரன் நிருபர்)**

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு தாளையடி பகுதியில் 135 கிலோ கிராம் கேரள கஞ்சா நேற்று வியாழக்கிழமை அதிகாலை மீட்கப்பட்டுள்ளது.

கஞ்சா கடத்தல் இடம்பெறுவதாக கடற்படை புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய வெற்றிலைக்கேணி கடற்படை, மற்றும் சிறப்பு அதிரடி படையினர் இணைந்து தாளையடி பகுதியில் தேடுதல் நடாத்தியுள்ளனர். கஞ்சா கடத்தலில் ஈடுபட்டவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

அவ்வேளை அங்கு காணப்பட்ட 135 கிலோ எடையுள்ள 03 கேரள கஞ்சா பொதிகளை கைப்பற்றிய வெற்றிலைக்கேணி கடற்படை, மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் குறித்த கஞ்சா பொதிகளை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

## முறையான அனுமதியின்றி உணவுப்பொருட்கள் இறக்குமதி

**(யாழ்.விசேட நிருபர்)**

முறையான அனுமதியின்றி உணவுப்பொருட்களை இறக்குமதி செய்து விற்பனை செய்த குற்றச்சாட்டில் வர்த்தகர் ஒருவருக்கு 12 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்து நாட்டிலிருந்து முறையான இறக்குமதி அனுமதியின்றி உணவு உற்பத்திப்பொருட்களை இறக்குமதி செய்து, யாழிலுள்ள பல்பொருள் அங்காடிகளுக்கு விற்பனை செய்து வந்த நபரொருவருக்கு எதிராக மானிப்பாய் பொது சுகாதார பரிசோதகரினால் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் நேற்றைய தினம் வியாழக்கிழமை வழக்கு தொடரப்பட்டது.

வழக்கு விசாரணையின் போது சந்தேகநபர் குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து,அவரைஎச்சரித்த நீதிமன்றம் 12 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து தீர்ப்பளித்தது.

## முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டம்



முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் கௌரவ இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான் தலைமையில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திரு.அ.உமாமகேஸ்வரனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டத்தின் முக்கிய பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் விவசாயம், காணி, மகாவலி அதிகாரசபை, வனவளத் திணைக்களம், நன்னீர் மீன்பிடி, கடற்றொழில் மற்றும் மீனவர்கள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் பிரதானமாக கலந்துரையாடப்பட்டு சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இந்நிகழ்வில் வடக்குமாகாண பிரதம செயலாளர் இளங்கோவன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான திரு.சாள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி.குணபாலன், வடமாகாண திணைக்களங்களின் செயலாளர்கள் மற்றும் பணிப்பாளர்கள், ஏனைய திணைக் களங்களின் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், பொலிஸ் உயர் அதிகாரிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.



மன்னார் பரப்புக் கடந்தான் முத்துமாரியம்மன் கோவில் புலம்பெயர் மக்கள் உதவியுடன் கோவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு விரைவில் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

## வவுனியா பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் கவனயீர்ப்பு போராட்டம்



**(வவுனியா விசேட நிருபர்)**

வவுனியா பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்கள் நேற்று பம்பைமடுவிலுள்ள பல்கலைக்கழகத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நாடளாவியரீதியில் பல்கலைக் கழக கல்விசாரா ஊழியர்கள் தமது சம்பள முரண்பாட்டை அரசாங்கம் தீர்க்க வேண்டும் என வலியுறுத்தி பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். அதற்கமையவே கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது 'பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை தீர்த்து வை', 'தமக்கு வழங்குவதாக உறுதிப்படுத்திய கொடுப்பனவை வழங்கு', '25 வீத அதிகரிப்பை உடனடியாக வழங்கு' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட கல்விசாரா ஊழியர்கள் கையில் ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் அரை மணி நேரம் இடம்பெற்ற இந்த கவயீர்ப்புப் போராட்டத்தையடுத்து கல்வி சாரா ஊழியர்கள் தங்களுக்கு இடையிலான கூட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# Lanka Hospitals இல் மருத்துவ வசதிகளை மேலும் மேம்படுத்தும் DIMO Healthcare



இலங்கையின் முன்னணியில் உள்ள பன்முகப்படுத்தப்பட்ட கூட்டு நிறுவனமான DIMO நிறுவனத்தின் சுகாதாரப் பிரிவும், இலங்கையில் Simens Healthineers ஐ பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனமுமான DIMO Healthcare, நாட்டின் முன்னணி மருத்துவமனைகளில் ஒன்றான Lanka Hospitals இன் தொழில்நுட்ப திறன்களை மேலும் மேம்படுத்தும் வகையில், மிக உயர்ந்த தரத்துடன் நோயறிதலை மேற்கொள்ள உதவும், அதிநவீன Siemens Healthineers Symbia Evo Excel Gamma Camera சாதனத்தை நிறுவியுள்ளது.

Lanka Hospitals இல் நிறுவப்பட்டுள்ள சமீபத்திய Siemens Healthineers Symbia Evo Excel Gamma Camera உபகரண தொகுதியானது, புற்றுநோய் உள்ளிட்ட, மருத்துவ விஞ்ஞானத்தில் சிக்கலான பல்வேறு நோய்களை துல்லியமாக கண்டறிவதிலும், சில புற்றுநோய் மருத்துவ சிகிச்சைகளின் முடிவுகளை வழங்குவதிலும் தனித்துவமான பங்கை வகிக்கிறது. அத்துடன், சிறுநீரகம், நுரையீரல், இதயம், நரம்புகள், உடலின் பல்வேறு உறுப்புகள் தொடர்பான பல்வேறு நோய்களை துல்லியமாக கண்டறிய இந்த இரட்டை உணரல் Gamma கெமரா சிறப்பாக பங்காற்றுகிறது.

Gamma கெமராவில் உள்ள மேம்பட்ட Symbia Evo Excel தொழில்நுட்பமானது, வேகமாகவும் உயர் தரமானதுமான படங்களையும் எடுக்க உதவுகிறது.

இது சிறிய தொற்றுநோய்களைக் கூட எளிதாகக் கண்டறிய உதவுவதோடு, ஆரம்பநிலை நோயறிதல் மற்றும் சிகிச்சை தொடர்பான முடிவுகளை எடுக்க மிகவும் உதவியாக உள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த Lanka Hospitals அணு மருத்துவ நிபுணர் சந்திரகுப்த உடுகம, “நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம், மருத்துவமனையின் வசதிகளை மேம்படுத்துவதற்கும், சிறந்த நோயாளர் பராமரிப்பை வழங்குவதற்கும், உள்நாட்டு சுகாதார கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் Lanka Hospitals வழங்கும் பங்களிப்பை இது மேலும் வலுப்படுத்தும். அந்த வகையில், நோயாளிகளுக்கு ஒப்பிட முடியாத பராமரிப்பை வழங்குவது தொடர்பிலான எமது பயணத்தை ஆதரிக்கும் சரியான பங்காளியாக, மருத்துவப் பொறியியலில் நிபுணத்துவம் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்ப அணுகுமுறைகள் கொண்ட DIMO Healthcare நிறுவனத்தை நாம் அடையாளம் கண்டுள்ளோம்." என்றார்.



# ஹோட்டல் துறையில் தொழில் வழிகாட்டல் செயலமர்வு



புத்தளம் ஹோட்டல் முகாமைத்துவ சர்வதேச கல்வி நிறுவனம் கற்பிட்டி பிரதேச செயலகத்தில் மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சியை திங்கட்கிழமை (10) நடாத்தியது.

கற்பிட்டி பிரதேச செயலகம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய இந்த செயலமர்வு நடாத்தப்பட்டது.

ஹோட்டல் முகாமைத்துவ கல்வி நிறுவனத்தின் நிபுணர்கள் குழு, ஹோட்டல் முகாமைத்துவ நுண்ணறிவு மற்றும் தொழில்சார் அறிவை ஆர்வமுள்ள மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டனர்.

புத்தளம் ஹோட்டல் முகாமைத்துவ சர்வதேச கல்வி நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று பணிப்பாளர் ஏ.ஜீ.சாஹிக்கின் வழிகாட்டலில் இந்த செயலமர்வு நடாத்தப்பட்டது.

**புத்தளம் தினகரன் நிருபர்**

# யூனிலீவர் தொழிற்சாலையில் சூரிய மின்சக்தி திட்டம் திறப்பு



யூனிலீவர் ஸ்ரீ லங்கா நிறுவனம் தனது ஹொரணை தொழிற்சாலையில் புதிய 2.33 மெகாவோற் சூரிய மின்சக்தித் திட்டத்தை அண்மையில் ஆரம்பித்து வைத்தது. இந்த திட்டத்தை Abans Electricals PLC நிறுவனத்துடன் இணைந்து அது முன்னெடுத்திருந்தது. யூனிலீவரின் நிலைபேறான தன்மை மற்றும் புதுப்பிக்கத்தக்க வலு சக்திக்கான அர்ப்பணிப்பிற்கான இந்த முக்கிய திட்டம், மொத்தமாக 1.3 மில்லியன் யூரோ முதலீட்டைக் கொண்டுள்ளது. யூனிலீவரின் உலகளாவிய காலநிலை மாற்றத்தை தணிக்கும் நடவடிக்கைத் திட்டத்துடன் (CTAP) இத்திட்டம் இணைந்துள்ளது. 2030ஆம் ஆண்டளவில் நாட்டின் மின்சார விநியோகத்தை புதுப்பிக்கத்தக்க மூலங்களில் இருந்து பெறுவதனை நோக்கி மாறுவதற்கான, இலங்கையின் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் இலட்சிய இலக்குகளுக்கு பங்களிப்புச் செய்கிறது.

யூனிலீவர் ஸ்ரீ லங்காவின் தலைவரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அலி தாரிக் இது பற்றி தெரிவிக்கையில், “இந்த சூரிய மின்சக்தி திட்டத்தை ஆரம்பித்து வைப்பதில் நாம் பெருமிதம் கொள்கிறோம். நிலைபேறான நடைமுறைகள் மூலம் எமது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான மற்றுமொரு முதலீடு இதுவாகும். இது, தரமான பொருட்கள் மற்றும் வர்த்தகநாமங்களை மட்டும் உற்பத்தி செய்வதை மாத்திரம் கொண்டதல்ல. நிலைபேறான வாழ்க்கையை அனைவருக்கும் பொதுவானதாக மாற்றும் எமது உலகளாவிய தூரநோக்கத்திற்கு அமைய, நாம் மேற்கொள்ளும் அனைத்து விடயங்களிலும் ஒரு பொறுப்புள்ள பெருநிறுவனமாக செயற்படுவதையும் உறுதி செய்கிறோம். இந்த முதலீடானது, எமது ஹொரணை தொழிற்சாலையின் மின்சக்தித் தேவையில் 30% 35% உற்பத்தி செய்யும் என்பது குறிப்பிடத்தக்கது.

வருடாந்தம் 2,090 மெட்ரிக் தொன் காபன் வெளியீட்டைக் கட்டுப்படுத்துவதன் மூலம் யூனிலீவரின் காபன் வெளியீட்டைக் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது 48,000 மரங்களை நடுவதன் மூலம் ஏற்படும் சூழல் மாற்றத்திற்குச் சமமானதாகும்.

# இரத்தினபுரி சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரண கண்காட்சி ஜூன் 29 – ஜூலை 01 வரை



முதற்தடவையாக இடம்பெறவுள்ள இரத்தினபுரி சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரண கண்காட்சி 2024 நிகழ்வு, 2024 ஜூன் 29 முதல் ஜூலை 01 வரை பிரசித்தி பெற்ற பெல்மதுளை கிராண்ட் சில்வர் ரே ஹோட்டலில் இடம்பெறவுள்ளது. இலங்கையின் இரத்தினக்கல் தலைநகரம் என வர்ணிக்கப்படுகின்ற இரத்தினபுரியின் மையத்தில் இடம்பெறவுள்ள இந்த ஆர்வமூட்டுகின்ற இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்களின் தனித்துவமான கண்காட்சி தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் (National Gem and Jewellery Authority NGJA) ஏற்பாட்டுடன் நடத்தப்படுவதுடன், இப்பிராந்தியத்தின் செழுமையான இரத்தினக்கல் பாரம்பரியத்தை வெளிச்சத்திற்கு கொண்டு வந்து, புதிய பொருளாதார வாய்ப்புக்களைத் தோற்றுவிப்பதே அதன் நோக்கமாகும். இலங்கையில் இரத்தினக்கல் மற்றும் ஆபரண தொழிற்துறையின் ஒழுங்குமுறையை பேணி, அதனை ஊக்குவிப்பதில் முக்கியமான செயல்பாட்டாளராகத் திகழ்ந்து வருகின்ற NGJA, இந்நிகழ்வை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைப்பதற்காக பத்திரிகையாளர் மாநாடொன்றை ஜூன் 12 ஆம் திகதியன்று ஏற்பாடு செய்திருந்தது. NGJA, கைத்தொழில் அமைச்சு, இரத்தினபுரி இலங்கை இரத்தினக்கல் முகவர்கள் மற்றும் அகழ்வாளர்கள் சங்கம், இரத்தினக்கல் வர்த்தகர்கள் மற்றும் அகழ்வாளர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பல்வேறுபட்ட சங்கங்கள், மற்றும் தொடர்புபட்ட ஏனைய பல்வேறு தரப்பினர் இடையில் காணப்படுகின்ற விரிவான ஒத்துழைப்பு தொடர்பில் இப்பத்திரிகையாளர் மாநாட்டில் விளக்கமளிக்கப்பட்டது.

இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஏற்றுமதிகள் மூலமாக 2025 ஆம் ஆண்டளவில் 2 பில்லியன் அமெரிக்க டொலர் தொகையை ஈட்டுவது என்ற இலங்கையின் இலக்கினை எட்டுவதில் இந்த ஆண்டு கண்காட்சி முக்கிய பங்கு வகிக்கும் என எதிர்பார்க்கப்படுவதுடன், உயர்தரம் வாய்ந்த இரத்தினக்கற்களைப் பெற்றுக்கொள்வதற்கான முன்னணி நகரமாக இரத்தினபுரியின் அந்தஸ்தை ஆணித்தரமாக நிலைநாட்டவும் வழிகோலும்.

# SEUSL மாணவர்களுக்கு தொழிற்துறை பயிற்சிகளை வழங்கி வலுவூட்டிய அமானா



அமானா வங்கி, இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்துடன் (SEUSL) கைகோர்த்து, விசேட தொழிற்துறை பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக பட்டம் பயிலும் மாணவர்களுக்கு தொழிற்துறைக்கு தயார்ப்படுத்துவதற்கு அவசியமான திறன்களை மேம்படுத்திக் கொள்வதற்கான வசதியை ஏற்படுத்தியிருந்தது. வங்கியின் அறிவு சந்தைப்படுத்தல் மற்றும் நிதிசார் உள்ளடக்க அலகினால் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது. வட்டிசாராத வங்கியியல் முறைமையைக் கொண்ட வங்கி மற்றும் நிதியியல் துறையில் திறன் படைத்த பணியாளர் குழுவை கட்டியெழுப்ப எதிர்பார்ப்பதுடன், உள்நாட்டு தொழிற்துறையில் திறன் கட்டியெழுப்பலுக்கான தற்போதையை தேவையை நிவர்த்தி செய்வதிலும் கவனம் செலுத்துகின்றது. மாணவர்களுக்கு பிரயோகச் செயற்பாடுகள் பற்றி பயிலவும், கல்விச் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக இடைக்கால பயிற்சிகளை பெற்றுக்கொள்வதற்கும் உதவும் வகையில் இந்தத் திட்டம் அமைந்திருந்தது.

அமானா வங்கியின் தலைமையகத்தில் நடைபெற்ற அறிமுக பயிற்சி நிகழ்வில் இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் குழுவினர்கள் பங்கேற்றிருந்தனர். இதன் போது வங்கிச் செயற்பாடுகளில் ஈடுபடுவோரிடமிருந்து நேரடியாக விடயங்களை பயில்வதற்கு இவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்திருந்ததுடன், பல்வேறு சிந்தனைகளைத் தூண்டும் அமர்வுகளில் பங்கேற்பதற்கான வாய்ப்பும் கிடைத்திருந்தது. வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி இம்தியாஸ் இக்பால் முன்னெடுத்திருந்த தகவல்கள் மற்றும் ஊக்கமளிக்கும் அமர்வுடன் இந்த நிகழ்வு முடிவடைந்தது. இதன் போது, மாற்றமடைந்து வரும் வங்கியியல் தொழிற்துறையில் தொழில்நிலையை எவ்வாறு கட்டியெழுப்புவது மற்றும் எதிர்காலத்துக்கு பொருத்தமான திறன்களை கொண்டிருப்பது என்பன தொடர்பான விளக்கங்களையும் வழங்கியிருந்தார்.

# இலங்கையில் முதன்முறையாக Pegasus Reef இல் Battle of the Reef



மிகவும் எதிர்பார்க்கப்பட்ட "Battle of the Reef" திருவிழா எதிர்வரும் ஜூலை மாதம் Pegasus Reef ஹோட்டல் கடற்கரையில் இடம்பெறவுள்ளது. இந்த ஆரம்ப நிகழ்வானது, இலங்கையில் உள்ள நிறுவன பங்கேற்பாளர்களுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட விளையாட்டுகள், நட்புறவு, பொழுதுபோக்கு உள்ளிட்ட மகிழ்ச்சியூட்டும் கொண்டாட்ட நிகழ்வுகளை உறுதியளிக்கிறது.

ஜூலை 27 ஆம் திகதி, Pegasus Reef ஹோட்டலின் அழகிய கடற்கரையானது விழாக் கோலம் பூண்டு, உற்சாகத்துடனும், நட்பு ரீதியான போட்டிகளின் ஆரவாரத்துடன் உயிர் பெறவுள்ளது. இலங்கையில் உள்ள பெரு நிறுவனங்களுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட பீச் வொலிபால், Tag Rugby, கயிறு இழுத்தல் உள்ளிட்ட போட்டிகளும் வேடிக்கை நிறைந்த பல்வேறு செயற்பாடுகளும் இதில் உள்ளடங்குகின்றன.

Pegasus Reef நிறுவனத்தின் பொது முகாமையாளர் ரேணுகே கொஸ்வத்த இது தொடர்பில் குறிப்பிடுகையில், "விளையாட்டுகள் மற்றும் இசை நிறைந்த கொண்டாட்டமான 'Battle of the Reef' விழாவை, Pegasus Reef ஹோட்டலில் நடாத்துவதில் நாம் பெருமிதம் அடைகிறோம். இது இலங்கையில் இடம்பெறும் இவ்வாறான "முதலாவது" நிகழ்வாகும். இந்த நிகழ்வின் முக்கிய விடயமாக வேடிக்கை விநோத அம்சங்கள் அமைந்திருக்கும்." என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இந்த ஆரம்ப நிகழ்வானது, எமது அழகிய கடற்கரைப் பின்னணியில், குழுவாக ஒன்றிணையும் உணர்வைத் தூண்டும் வகையில் வடிவமைக்கப்பட்ட, பல்வேறுபட்ட அனுபவத்தை வழங்குவதற்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஒரு தனித்துவமான தளத்தை வழங்கும் இந்நிகழ்வானது, தமக்குள் இருக்கும் தடகள வீரனை வெளிக் கொண்டுவருவதோடு மட்டுமல்லாமல், தோழமை மற்றும் குழுப்பணியின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறது." என்றார்.

# இலங்கை ரியல் எஸ்டேட் துறையில் புகழ் பெற்ற Groundworth Partners



இலங்கையின் ரியல் எஸ்டேட் துறையில் வளர்ந்து வரும் நட்சத்திரமான Groundworth Partners, நுணுக்கமான முறையில் தெரிவு செய்யப்பட்ட ரியல் எஸ்டேட் வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் தமது வாடிக்கையாளர்களுக்கு ஒப்பிட முடியாத பெறுமதியை வழங்குகின்ற அத்திவாரத்தில் கட்டமைக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும்.

உங்கள் எதிர்பார்ப்புகளுக்கு அப்பால் பல்வேறு விடயங்களை Groundworth Partners வழங்குகிறது. அவர்களது முழுமையான செயன்முறையானது ஒவ்வொரு வாய்ப்பும் மிக உயர்ந்த தரத்தை பூர்த்தி செய்வதை உறுதி செய்கிறது. முன்னாள் நீதவானின் தலைமையிலான சிரேஷ்ட சட்டக் குழுவினால் சொத்துகளின் அனைத்து ஆவணங்களும் ஆய்வு செய்யப்படுவதன் அடிப்படையில், சட்ட ரீதியான பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கின்ற விடயமும் இதில் அடங்குகின்றது. பாதுகாப்பு மிக முக்கியமானது என்பதால், சிறந்த சுற்றுப்புறங்களில் உள்ள சொத்துகளை அவர்கள் தெரிவு செய்து வழங்குகிறார்கள். இடத்தை இலகுவாக அடையும் வசதி மிகவும் அவசியமாகும் என்பதால், பல்வேறு மூலோபாய ரீதியாக பெறப்பட்ட, சிறப்பான வகையில் வீதிகளுடன் இணைக்கப்பட்டு, எளிதாக அணுகக் கூடிய காணிகளை அவர்கள் வழங்குகின்றனர். வசதி என்பது முக்கிய அம்சம் என்பதால், ஒவ்வொரு Groundworth சொத்தும், அத்தியாவசிய சேவைகள் மற்றும் வசதிகளைக் கொண்ட இடங்களுக்கு அருகில் காணப்படுகின்றன. முக்கியமாக, எதிர்கால வளர்ச்சியை கருத்தில் கொண்டுள்ள அவர்களது ரியல் எஸ்டேட் நிபுணர்கள் குழுவினர், எந்தவொரு காணியையும் பெறுவதற்கு முன்னர் அதற்கான சாத்தியமான எதிர்கால மதிப்பை கவனமாக ஆய்வு செய்கின்றனர்.

வணிகம், சட்டம், நிதி, கட்டடக்கலை ஆகிய விடயங்களில் விரிவான அனுபவமிக்க நிபுணர்களின் குழுவினால் Groundworth Partners நிறுவனம் வழிநடத்தப்படுகிறது. இந்த நிபுணத்துவம் அவர்களது வாடிக்கையாளர்களுக்கு விரிவான மற்றும் நெறிப்படுத்தப்பட்ட அனுபவத்தை உறுதி செய்கிறது.

# ஹேமாஸ் – Hatch இணைந்து முன்னெடுக்கவுள்ள Slingshot Accelerator இரண்டாம் கட்டம்




ஹேமாஸ், Hatch உடன் இணைந்து Hemas x Hatch Slingshot திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளன. 2023 ஆம் ஆண்டில் முன்னெடுத்திருந்த Accelerator திட்டத்தின் வெற்றிகரமான பூர்த்தியைத் தொடர்ந்து, வேகமாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்கள், சுகாதாரப் பராமரிப்பு போன்ற துறைகளைச் சேர்ந்த 25 ஆரம்ப நிலை நிறுவனங்களுக்கு Slingshot 2.0 ஊடாக ஆதரவளிக்க எதிர்பார்க்கப்படுகின்றது. முதற் கட்டத்தின் போது கல்வி மற்றும் கல்வித் தொழில்நுட்பம், வேகமாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்கள், சுகாதார பராமரிப்பு மற்றும் சரக்குக் கையாளல் போன்ற துறைகளைச் சேர்ந்த 25 ஆரம்ப நிலை நிறுவனங்களுக்கும், 8 ஆரம்பநிலை நிறுவனங்களுக்கு accelerated ஆதரவையும் வழங்கியிருந்தது.

இலங்கையின் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு புத்தாக்கம் மற்றும் பங்களிப்பை ஊக்குவித்து இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வந்துள்ளது. நீண்ட வரலாற்றைக் கொண்ட பன்முகப்படுத்தப்பட்ட வியாபாரச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஹேமாஸ் குழுமம், வியாபார சூழலில் வெற்றிகரமாக செயலாற்றுவதற்கு புத்தாக்கத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளது. இந்த அர்ப்பணிப்பின் பிரகாரம், 2023 ஆம் ஆண்டில் தனது 75 வருட பூர்த்தியை குறிக்கும் வகையில் 75 ஆரம்ப நிலை நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதற்கான இலக்கையும், அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தியிருந்தது.

இந்த ஆரம்பநிலை நிறுவனங்களின் வளர்ச்சிக்கு இந்தத் திட்டங்கள் உதவியாக அமைந்திருக்கும் என எதிர்பார்க்கப்படுவதுடன், இலங்கையின் பொருளாதாரத்துக்கு பெருமளவு பங்களிப்பை வழங்கும் நிறுவனங்களாகவும் திகழ்கின்றன.



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் திருகோணமலையில் 10 ஆவது சர்வதேச யோகா தினம்! இந்திய உயர் ஸ்தானிகராலயம் மற்றும் கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் ஏற்பாட்டில் 10 ஆவது சர்வதேச யோகா தினம் திருகோணமலை மெக்கேயர் மைதானத்தில் நேற்று (14) இடம்பெற்றது. இந்நிகழ்வு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் இடம்பெற்றதுடன், யாழ்ப்பாண இந்திய உயர் ஸ்தானிகர் சாய் முரளி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். இந்நிகழ்வில் 2500 யிற்கும் மேற்பட்ட யோகாசன மாணவர்கள் கலந்துக் கொண்டனர்.

# கிழக்கின் குரல்

## அக்கரைப்பற்று மாநகரசபை வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் 2024ஆம் ஆண்டுக்கான 1,500 கிலோமீற்றர் வீதி புனரமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று மாநகர சபைக் குட்பட்ட பலாஹ் வட்டாரத்தில் கொங்கிறீட் இடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பலாஹ் வட்டாரத்தின் முன்னாள் மாநகரசபை உறுப்பினர் ஏ.சி. முகம்மட் நுஹ்மான், தேசிய காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லாவிடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க பலாஹ் வட்டாரத்தில் இதுவரை புனரமைக்கப்படாமல் இருந்த சுமார் 760 மீற்றர் கொண்ட வம்மியடி வீதி ரூ.26.6 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் கீழ் புனரமைக்கப் பட்டுள்ளது.

முன்னாள் மாநகரசபை உறுப்பினர் ஏ.சி.முகம்மட் நுஹ்மான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாஉல்லா ஆகியோருக்கு அப்பகுதி பொதுமக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.



தேசிய சுற்றுச்சூழல் வாரத்தை முன்னிட்டு மூதூர் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக்கின் ஏற்பாட்டில் மூதூர் கொல்லனாற்றுப்பகுதியில் சிரமதான நிகழ்வொன்று அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம்.

(படம்: தோப்பூர் தினகரன் நிருபர்)

## பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு உளநலம் தொடர்பான செயலமர்வு

(தம்பலகாமம் குறூப் நிருபர்)

தம்பலகாமம் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான உளநலம் தொடர்பான செயலமர்வு நேற்று பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி நிகழ்வில் உளநலம் உள்ளிட்ட உளநெருக்கடி இதனை தீர்ப்பதற்கான ஆலோசனைகள் போன்றன தெளிவூட்டப்பட்டன.

நிகழ்வுக்கு வளவாளராக கிண்ணியா தளவைத்தியசாலையின் உளநலப் பிரிவின் வைத்தியர் ஏ.கே.எம்.நஸ்மி கலந்து கொண்டார். இதில் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், நிர்வாக உத்தியோகத்தர் உட்பட சக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## காத்தான்குடி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

காத்தான்குடி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் காத்தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

காத்தான்குடி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட அபிருத்திக்குழுவின் இணைத் தலைவர்களில் ஒருவருமான பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹீர் மௌலானா காத்தான்குடி பிரதேச செயலாளர் உதய சிறீதர் உதவி பிரதேச செயலாளர் திருமதி சில்மியா காத்தான்குடி பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி தனுஜா காத்தான்குடி நகர சபை செயலாளர் திருமதி ரிப்கா உட்பட அரச திணைக்களங்களின் அதிகாரிகள் வைத்தியர்கள் சமுர்த்தி முகாமையாளர்கள பொலிஸார் கிராம உத்தியோகத்தர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் காத்தான்குடி பள்ளி வாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன பிரதிநிதிகள் சிவில் சமூக பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்

கடந்த அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஆராயப்பட்டதுடன் இதன் போது காத்தான்குடி நகர சபை எல்லை விவகாரம், வீதி அபிவிருத்தி, கல்வி, காத்தான்குடி ஆதார வைத்தியசாலை உட்பட பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

காணிப் பிரச்சினை தொடர்பாகவும் இதில் கலந்துரையாடப்பட்டன.



## கிண்ணியா அல் – அமான் அரபுக் கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா

(கிண்ணியா மத்திய நிருபர்)

கிண்ணியா அல் அமான் அரபிக் கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா நேற்றுமுன்தினம் (13) அரபுக் கல்லூரி முன்றலில் நடைபெற்றது.

கல்லூரியின் தலைவர் ஏ. எஸ். மாஹில் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் 31 ஹாபிழ்களும் 47 உலமாக்களும் பட்டம்பெற்று வெளியேறினர். அரபுக் கல்லூரியின் அதிபர் மௌலவி கைஸ் மற்றும் மௌலவி மூதூர் சௌமி கரீம் ஆகியோர் இங்கு விசேட உரையாற்றினர்.

மேலும் கல்லூரியின் ஆசிரியர்கள், ஏழாம் ஆண்டு மாணவர்களால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மருத்துவத் துறைக்கு தெரிவான மாணவன் நீரில் மூழ்கி பரிதாப மரணம்!

(காரைதீவு குறூப் நிருபர்)



காரைதீவைச் சேர்ந்த சிவகரன் அக்சயன்( வயது 20) என்ற மாணவன் நேற்று(14) காலை நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தார்.

சிவகரன் ஜீவரஞ்சனி தம்பதியினரின் ஒரேயொரு பிள்ளையான அக்சயன் என்ற காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் கல்விகற்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இம்முறை மருத்துவத் துறைக்கு தகுதிப்பெற்ற இரண்டு மாணவர்களுள் அக்சயன் ஒருவராவார்.

இவர் அண்மையில் வெளியான G.C.E A/L 2023 (2024) பரீட்சையில் சித்திபெற்று மாவட்டத்தில் 23 வது இடத்தில் மருத்துவதுறைக்கு விண்ணப்பிக்கத் தகுதிபெற்றிருந்தார்.

அவர் தனது குடும்பத்தோடு மூன்று நாட்களுக்கு முன்னர் உகந்த மலை முருகன் ஆலயத்துக்கு சென்று அங்கு தரித்துவிட்டு நேற்று வெள்ளிக்கிழமை காலை வரும்பொழுது பொத்துவில் மற்றும் லாகுகலைக் கிடையிலுள்ள நீலகிரி ஆற்றில் நீராடிய போதே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

அவரது பூதவுடல் மேலதிக விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைக்காக லாகுகலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## "ஒரு முண்டாசு கவிஞரின் முஸ்லிம் நேசம்"

# பாரதியாரின் சமயப் பொதுமைக்கும் சமரச நோக்குக்கும் சான்று பகரும் நூல்



எழுத்துத் துறையில் பல தசாப்தங்களாக இலக்கியப் பணி புரிந்து வரும் மானா மக்கீன், இலக்கிய உலகில் தவிர்க்க முடியாத ஒருவர். இத்துறையில் இவர் 40க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டு இலக்கியத் துறைக்கு பெரும் பணியாற்றியுள்ளார்.

மகாகவி பாரதியார் மீது அதிக ஈடுபாடுடைய மானா மக்கீன், "ஒரு முண்டாசுக் கவிஞரின் முஸ்லிம் நேசம்" என்ற பெயரில் மகாகவி பாரதியாரின் முஸ்லிம் நேசம் பற்றிய பல சுவாரசியமான தகவல்களைத் தொகுத்து வழங்கியுள்ளார். 132 பக்கங்களை உள்ளடக்கியதாக மணிமேகலை பிரசுரம் வெளியிட்டுள்ள இந்த நூலில் உள்ள அருமையான பல தகவல்களில் சிலவற்றை வாசகர்களுக்காக இங்கு முன்வைக்கிறேன்.

மானா மக்கீன் தனது இந்த நூலுக்கான உள்ளடக்கங்களை ஆரம்பிக்கிறேன், தொடர்கிறேன், தொட்டுத் தருகிறேன், ஆய்ந்து பார்க்கிறேன், இந்தியாவைத் தொடுகிறேன், இவர் பார்வையில் இஸ்லாம், பாடல்களில் இஸ்லாமியத் தாக்கம், விஜயாவைக் கண்டுபிடித்த வெங்கடாசலபதி, தமிழ் இதழியலில் புதுசு புரட்சி, நிறுத்துகிறேன் நெருடல்களை நேர் செய்து, விடைபெறும் வேளை, உசாத்துணை நூல்கள் ஆகிய 12 தலைப்புகளில் மிகவும் அழகாக முன்வைக்கின்றார்.

முண்டாசுக் கவிஞர், இளசை சுப்பிரமணியன் என்று சொன்னால் புரியாதவர்களுக்குக் கூட மகாகவி பாரதியார் என்றால் சட்டென்று புரிந்துவிடும். மகாகவி பாரதியாரை பலரும் பல்வேறு வகையாக விமர்சித்தாலும்கூட அவருடைய மனிதப் பண்பாட்டுடன் கூடிய எழுத்துக்களை யாரும் மறுதலிக்க முடியாது என்று முனைவர் பா. இறையரசன் (தஞ்சாவூர்) தமது 'இதழாளர் பாரதி' (1995 வெளியீடு) என்ற நூலில் 197 -198 ஆகிய பக்கங்களில் குறிப்பிடுகின்றார்.

அத்துடன் ஓய்வுறக்கத்திலிருக்கும் பன்னூலாசிரியர் எம்.ஆர்.எம். அப்துல் ரஹீம் (தொண்டி) மற்றும் பேராசிரியர், முனைவர் மு. சாயபு மரக்காயர் (காரைக்கால்) போன்ற விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் மட்டுமே இந்த முண்டாசுக் கவிஞருக்கு முட்டுக் கொடுத்துள்ளார்கள் என்ற தகவலையும் முன்வைக்கின்றார் நூலாசிரியர் மானா மக்கீன்.

1983 ஆம் ஆண்டுகளில் "பாரதி கண்ட இஸ்லாம்" என்ற பெயரில் ஒரு சிறு நூல் வெளிவந்ததாக அறிய முடிகின்றது. இந்த நூலுக்கு மர்ஹூம் அப்துர் ரஹீம் அணிந்துரை வழங்கியுள்ளார். நூலாசிரியர் மு.சாயபு மரக்காயர் பொதுவாக இஸ்லாமிய தத்துவங்கள் மீதும், திருநபியவர்கள் மீதும் பாரதியார் பெருமதிப்புக் கொண்டிருந்தார் என்ற தகவல்களை பல சான்றுகளுடன் அந்த நூலில் முன்வைத்துள்ளார்.

அத்துடன் "பாரதி கண்ட இஸ்லாம்" என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை எழுதும் அளவுக்கு பாரதியார் இஸ்லாத்தைப் பற்றி எழுதி இருக்கின்றாரா? என்று தனது நண்பர்கள் மிகுந்த வியப்போடு கேட்டதாகக் குறிப்பிட்டு, கதை, கட்டுரை, கவிதை போன்ற எல்லாத் துறைகளிலும் பாரதியார் இஸ்லாத்தைப் பற்றி பேசியிருப்பதாக தான் சுட்டிக் காட்டியதாகக் கூறுகின்றார்.

பாரதியின் இஸ்லாமிய படைப்புகளைப் படித்த போதே உண்மையில் அவர் மீது எனக்கு மிகுந்த மதிப்புக் கூடியது என்று குறிப்பிட்டு, சாதி மதங்களுக்கு அப்பால் பாரதியின் மனித நேயமே இந்த "பாரதி கண்ட இஸ்லாம்" என்ற நூலை எழுதுமாறு தன்னைத் தூண்டியதாக மு.சாயபு மரக்காயர் தனது நூலின் என்னுரையில் குறிப்பிடுகின்றார்.

மகாகவி பாரதியார் இந்து சமயத்தில் அழுத்தமான பிடிப்பும் ஆழ்ந்த நம்பிக்கையும் கொண்டவர். ஆயினும் பிற சமய தெய்வங்களை வெறுத்தவர் அல்லர். ஏக இறைவனாகிய அல்லாஹ்வையும் இயேசு கிறிஸ்துவையும் போற்றிப் புகழ்ந்துள்ளார். பாரதியாரின் சமயப் பொதுமைக்கும், சமரச நோக்கிற்கும் அவருடைய பல பாடல்கள் சான்றாக அமைந்துள்ளன. இவ்வாறான பின்னணியுடைய ஒரு மகாகவி பாரதியாரைத் தோன்றாத் துணையாக வைத்துக் கொண்டு அவர் மறைந்து நூற்றாண்டைக் கடந்த நிலையிலும் முண்டாசுக் கவிஞருக்கு நானும் ஒரு முண்டாசு கட்ட விழைகின்றேன் என்று மானா மக்கீன் குறிப்பிடுவது போற்றத் தக்கது. அந்தவகையிலேயே முஸ்லிம் அபிமானிகளுக்குத் தெரியாத மகாகவியின் முஸ்லிம் நேசம் பற்றிய பல தகவல்களைத் திரட்டி தனது பதிவை முன்வைக்கின்றார். நூலாசிரியர் மானா மக்கீன். முண்டாசுக் கவிஞரின் முழு வாழ்க்கையையும் இங்கு நோக்காமல் தனது இதழியல் வாழ்க்கை மற்றும் மேடைகளில் முஸ்லிம் நேசத்தை எவ்வாறு வெளிப்படுத்தினார் என்பதே இங்கு எடுத்து நோக்கப்பட்டுள்ளது.

தனது இதழியல் வாழ்க்கையில் பின்வரும் இதழ்களின் மூலம் பாரதியார் தனது இதழியல் ஆளுமையைப் பதிவு செய்துள்ளார்.

சுதேசமித்திரன் (சென்னை) 1904, ஆசிரியர்
சக்கரவர்த்தினி (சென்னை) 1905, ஆசிரியர்
இந்தியா (சென்னை) 1906, ஆசிரியர்
பாலபாரதா (சென்னை) 1906, ஆசிரியர்
இந்தியா (புதுவை) 1908, ஆசிரியர்
விஜயா (புதுவை) 1909, ஆசிரியர்
கர்மயோகி (புதுவை) 1910, ஆசிரியர்
தர்மம் (புதுவை) 1910, ஆசிரியர்
சூரியோதயம் (புதுவை) 1910, ஆசிரியர்
பாலபாரதா (புதுவை) 1910, ஆசிரியர்
சுதேசமித்திரன் (சென்னை) 1916, துணை ஆசிரியர்

சுதேசமித்திரனில் பாரதியார் செய்துள்ள பங்களிப்பை முதன்மையானதாகக் குறிப்பிடுகின்றார். அத்துடன் 1904 இல் ஆரம்பித்த பாரதியாரின் இதழியல் பணி 1921 இல் முற்றுப் பெற்றதாகவும் குறிப்பிடுகின்றார்.

ஆரம்பத்தில் ஆங்கிலேய ஏகாதிபத்திய இந்திய அரசியலில் இந்து முஸ்லிம் நிலைமை பற்றியும், பின்னர் இஸ்லாம் பற்றியும், இறைவன் (அல்லாஹ்) பற்றியும், இறைத் தூதர் (நபிகள் நாயகம்) குறித்தும் அவர்கள் தம் அடியார்கள் (மக்கள்) சம்பந்தமாகவும் வழங்கியுள்ள விடயங்களுக்காக ஒரு பட்டியலைக் குறிப்பிட்டு தனது ஆய்வை முன்வைக்கிறார் நூலாசிரியர்.

இதில் 'நமது முகமதிய சகோதரர்கள், வேலூர் முகமதிய கான்ஃபரன்ஸ், ஹிந்து முகமதிய ஒற்றுமை, இந்து முகமதியர், இஸ்லாம் மார்க்கத்தின் மகிமை, அல்லா.. அல்லா.." போன்ற தலைப்பில் அமைந்த பாரதியாரின் கட்டுரை, கதை, கவிதை, பாடல், சொற்பொழிவு ஆகியவற்றின் சாராம்சம் போன்றவை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

சுதேசமித்திரனில் (1906 ஆகஸ்ட் 11) இடம்பிடித்த, "நீரோ சக்கரவர்த்தி கல்லறை மீது ஓர் புஷ்பம்" என்ற தலைப்பில் அமைந்த பின்வரும் வரிகள் இங்கு கவனிக்கத்தக்கது. "இந்தியா" ஹிந்துவுக்கு மட்டிலும் சொந்தமில்லை. மகமதியனுக்கும் சொந்தமே. அநாகரிக இடைக் காலங்களில் நமது மூதாதையர்கள் சண்டையிட்டுக் கொண்டதாக அந்நிய தேசத்துப் பொய் சரித்திரக்காரர் கூறும் கதைகளை நாம் கருத வேண்டியதில்லை. பொது மாதாவாகிய பாரத தேவியின் பொது நன்மையை கவனிக்க வேண்டுமேயல்லாமல் ஜாதி, மத, குல, பேதங்களைப் பாராட்டி தேசத்தை மறக்கும் மனிதனை பாரத தேவி சர்வ சண்டாளராகவே கருதுவாள்.

முண்டாசுக் கவிஞரின் "இஸ்லாம் மார்க்கத்தின் மகிமை" என்ற தலைப்பில் அமைந்த சொற்பொழிவின் சாராம்சம் இந்த நூலின் 20 ஆம் பக்கம் 30 ஆம் பக்கம் வரை இடம் பிடித்துள்ளது. அந்த சொற்பொழிவில் ஒப்புவிக்கப்பட்ட கருத்துக்களை அவதானிக்கும் போது முண்டாசுக் கவிஞருக்கு முகமது நபி (ஸல்லல்லாஹு{ அலைஹி வஸல்லம்) அவர்கள் மீது மிகுந்த பற்றிருந்ததை அறிய முடிகிறது. இதன் முழுமையான சொற்பொழிவு இன்னும் அற்புதமாக இருந்திருக்கும் என்று குறிப்பிடுக்கின்றார் நம் நூலாசிரியர்.

முண்டாசுக் கவிஞர் பாரதியார் தமது துணைவியாரின் ஊராகிய கடையத்தில் தங்கிய காலத்தில் நெல்லை மாவட்டத்து பொட்டல் புதூரிலே முஸ்லிம்களின் ஏக இறைவன் அல்லாஹ்வைப் பற்றிய அருமையான பாடல் ஒன்றைப் பாடிய பின்னர் நிகழ்த்திய சொற்பொழிவின் சாராம்சம் அன்றைய சுதேசமித்திரனில் இடம்பெற்றிருந்தது.

பிற்காலத்தில் பலராலும் தொகுக்கப்பட்ட பாரதியாரின் கவிதை நூல்களில் மூன்று சரணங்களைக் கொண்ட இந்தப் பாடல் முழுமையாக இடம்பெறவில்லை. 1920.06.24 இல் வெளிவந்த சுதேசமித்திரன் இதழில் இப்பாடல் வெளியிடப்பட்டுள்ளது. பின்னர் "கதாரத்னாகரம்" 1920 ஜுலை இதழிலும் வெளியிடப்பட்டுள்ளது.

"இன்னும் அவனே இரவையும், பகலையும்; சூரியனையும், சந்திரனையும் படைத்தான்; (வானில் தத்தமக்குரிய) வட்டவரைக்குள் ஒவ்வொன்றும் நீந்துகின்றன" (அல்குர்ஆன் 21 : 33)

மேலுள்ள அல்குர்ஆன் வசனக் கருத்தையே பாரதியாரின் அல்லா என்ற பாடலில் உள்ள முதலாவது சரணம் வெளிப்படுத்துவதாக அமைகின்றது. இந்தப் பாடல் மூலம் பாரதியார் பல்லாண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழக முஸ்லிம் நெஞ்சங்களில் நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டார்.

நூலின் 39 முதல் 51 ஆம் வரையான பக்கங்களை பாரதியாரின் முஸ்லிம் கதாபாத்திரங்களை மையப்படுத்தி எழுதப்பட்ட "ரயில்வே ஸ்தானம்" என்ற சிறுகதை அலங்கரித்துள்ளது. இந்தச் சிறுகதையானது 1920.05.22 ஆம் திகதியில் பிரசுரமான சுதேசமித்திரன் இதழில் பிரசுரம் கண்டுள்ளது.




மகமதியர்களும் பகைமைகளற்று சினேகபூர்வமாக சகோதர மனப்பான்மையுடன் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதையும் பாரதியார் தனது எழுத்துக்களின் மூலம் மிகவும் உறுதியாக முன்வைத்தார். அத்துடன் முகமதியர்களுக்கு இது அந்நிய தேசமன்று. அவர்கள் இங்கே இன்று நேற்று வந்து குடியிருக்கும் ஜனங்கள் இல்லை. இந்நாடு இந்துக்களுக்கு எவ்வளவு சொந்தமோ, அவ்வளவுக்கு மகமதியர்களுக்கும் சொந்தம் என்று குறிப்பிட்டுள்ளார். "இந்தியா"இதழில் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை பற்றி மேலும் வலியுறுத்த விரும்பிய பாரதியார், தமிழ் ஆண்டு மாதம் நாள் ஆகியவற்றுடன் முஸ்லிம் ஆண்டு மாதம் நாள் முதலியவற்றையும் முதன் முதலாக "இந்தியா" இதழில் பொறித்து இதழியல் துறையில் அதிசயம் புரிந்தார். எனவே இந்துக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமை எனும் கயிற்றைப் பிடித்தவர்களாக இருக்க வேண்டும் என்பதில் பெரும் விருப்புடையவராகவே முண்டாசுக் கவிஞர் திகழ்ந்துள்ளார்.

இன்றைய பரந்த பாரதத்திலும் இலங்கையிலும் வாழுகின்ற இந்துக்களும் முஸ்லிம்களும் ஒரு தாய் மக்களாக இணைந்து வாழ கரம் கோர்த்து விடுவார்களேயானால், அதுவே நம் நூலாசிரியரின் பேனாவுக்கு கிடைத்த மாபெரும் வெற்றி என்று குறிப்பிட்டு இந்த நூலை நிறைவு செய்கின்றார் மானா மக்கீன்.

இதுவரை நான் வாசித்த இலக்கிய நூல்கள் பலவற்றில் மானா மக்கீனின் "ஒரு முண்டாசுக் கவிஞரின் முஸ்லிம் நேசம்" என்ற இந்த நூல் என்னை பிரமிக்கச் செய்த ஒரு நூல் என்றுதான் குறிப்பிட வேண்டும். இவ்வகையான நூல்கள் இக்காலத்தில் இன ஒற்றுமையை வலுப்படுத்தத் தேவையான ஒரு நூலாகவே அமைந்துள்ளது. மறுபதிப்புச் செய்ய வேண்டிய தேவையையும் இந்த நூலுக்கு இருக்கிறது. நூலாசிரியர் அதனையும் கருத்திற்கொள்வார் என்று நினைக்கின்றேன். நூலாசிரியர் நீடூழி வாழ்ந்து, இன்னும் பல காத்திரமான இலக்கிய நூல்களைத் தர வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்!!!

வெலிகம ரிம்ஸா முஹம்மத்...

# நியூசிலாந்தை வெளியேற்றி 'சுப்பர் 8' சுற்றுக்கு ஆப்கான் அணி முன்னேற்றம்

## இலங்கையின் வெளியேற்றம் உறுதி

பப்புவா நியூகினிக்கு எதிரான டி20 உலகக் கிண்ண சி குழுவுக்கான போட்டியில் 7 விக்கெட்டுகளால் வெற்றிட்டிய ஆப்கானிஸ்தான் அணி சுப்பர் 8 சுற்றுக்கு முன்னேற்றம் கண்டது. இதன்மூலம் அந்தக் குழுவில் முதல் இரு போட்டிகளிலும் தோல்வியை சந்தித்திருக்கும் நியூசிலாந்து அணி முதல் சுற்றுடனேயே வெளியேற வேண்டி ஏற்பட்டுள்ளது.

டிரினிடாட்டில் இலங்கை நேரப்படி நேற்று (14) நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட பப்புவா அணியை 95 ஓட்டங்களுக்கே ஆப்கானால் சுருட்ட முடிந்தது. பசால் ஹக் பரூக்கி 4 ஓவர்களுக்கும் 16 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 3 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

பதிலெடுத்தாடிய ஆப்கான் அணி முதல் இரு விக்கெட்டுகளையும் 22 ஓட்டங்களில் பறிகொடுத்தபோதும் 15.1 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 101 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்ட முடிந்தது. குல்புத்தீன் நாயிப் 36 பந்துகளில் 4 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 49 ஓட்டங்களை பெற்றார்.

இந்த முடிவினால் கடந்த மூன்று டி20 உலகக் கிண்ணப் போட்டிகளிலும் அரையிறுதி வரை முன்னேறி 2021 தொடரிபில் இறுதிப் போட்டி வரையில் முன்னேறிய நியூசிலாந்து அணி உலகக் கிண்ணத்தில் இருந்து வெளியேறியுள்ளது. ஆப்கானிஸ்தான் அணி நியூசிலாந்துக்கு எதிரான முதல் சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டியதோடு அந்த அணி இதுவரை ஆடிய மூன்று போட்டிகளிலும் வெற்றிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்று நடந்த பி குழுவின் ஓமானுக்கு எதிரான போட்டியில் இலகு வெற்றியீட்டிய இங்கிலாந்து அணி தனது சுப்பர் 8 வாய்ப்பை தக்கவைத்துக் கொண்டுள்ளது. அன்டிகுவாவில் நடந்த அந்தப் போட்டியில் ஓமான் அணியை 47 ஓட்டங்களுக்கு சுருட்டிய நடப்புச் சம்பியன் இங்கிலாந்து வெற்றி இலக்கை 3.1 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து பெற்றது.

நேற்று முன்தினம் நடந்த டி குழுவுக்கான தீர்க்கமான போட்டியில் நெதர்லாந்து அணியை வீழ்த்தி பங்களாதேஷ் அணி தனது சுப்பர் 8 வாய்ப்பை அதிகரித்துக் கொண்டது. டி குழுவில் தென்னாபிரிக்க அணி ஏற்கனவே அடுத்த சுற்றுக்கு முன்னேறி இருப்பதோடு நேற்றைய போட்டியில் முடிவு ஒன்று கிடைக்கப்பெற்றதை அடுத்து இலங்கை அணி ஆரம்ப சுற்றுடன் வெளியேறுவது உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் இந்தக் குழுவில் சுப்பர் எட்டுக்கு முன்னேறுவதற்கு பங்களாதேஷ் மற்றும் நெதர்லாந்து அணிகளுக்கு இடையே போட்டி நீடித்து வருகிறது.



# ரஷ்யாவின் வட்டியால் உக்ரைனுக்குக் கடன்

ஜி7 நாடுகளின் தலைவர்கள் உக்ரைனுக்கு 50 பில்லியன் டொலர் கடன் வழங்க இணங்கியுள்ளனர்.

முடக்கப்பட்ட ரஷ்யச் சொத்துகளில் இருந்து கிடைக்கும் வட்டியைப் பயன்படுத்தி அந்தக் கடன் தொகை கொடுக்கப்படும். இத்தாலியில் நடைபெறும் ஜி7 நாடுகளின் உச்சநிலை மாநாட்டில் உக்ரைனுக்குக் கடன் கொடுக்கும் உடன்பாடு எட்டப்பட்டது.

ரஷ்யாவுடன் இரண்டு ஆண்டுக்கும் மேலாகத் தொடரும் போரில் கூடுதலான நாடுகளின் ஆதரவைப் பெற உக்ரைன் முயன்று வருகிறது.

இந்தக் கடனுதவி, ரஷ்யாவின் படையெடுப்புக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதில் உலகம் ஒன்றுபட்டுள்ளதை ரஷ்யாவுக்குக் காட்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறினார். உக்ரைனுடன் பத்தாண்டுப் பாதுகாப்பு உடன்பாட்டுக்கும் அமெரிக்கா உறுதி தெரிவித்துள்ளது.



அதன்படி அமெரிக்கா உக்ரைனுக்கு ஆயுதங்கள், வெடிபொருட்கள் முதலியவற்றைக் கொடுக்கும். மேலும் அமெரிக்கா அதற்குப் பயிற்சி அளிக்கும், உளவுத் தகவல்களையும் உக்ரைனுடன் பகிர்ந்து கொள்ளும்.

உடன்பாடு, நேட்டோ அமைப்பில் அங்கத்துவம் பெற உக்ரைனுக்குப் பாலமாக அமையும் என்று அந்நாட்டு ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி கூறுகிறார்.

# சர்வதேச செய்திகள்

## மஸ்க்கின் சம்பளம் 56 பில்லியன் டொலர்



டெஸ்லா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி இலோன் மஸ்க்கிற்குச் சம்பளமாய் 56 பில்லியன் டொலர் கொடுப்பதற்கு ஆதரவாக அதன் பங்குதாரர்கள் வாக்களித்துள்ளனர்.

டெஸ்லாவின் பங்கு விலையைப் பொறுத்து அவரின் துல்லியமான சம்பளத் தொகை மாறுபடும். இது உலகின் பெரும் செல்வந்தரான மஸ்க் கடந்த ஆண்டு ஈட்டியதை விட 300 மடங்கு அதிகமாகும்.

இவ்வாண்டு ஆரம்பத்தில் டிலவேர் நீதிபதி, மஸ்க்கிற்குப் பரிந்துரைக்கப்பட்ட அவ்வளவு பெரிய சம்பளத் தொகையை நிராகரித்தார். இந்நிலையில் நிறுவனத்தை டிலவேரிலிருந்து டெக்சஸுக்கு மாற்றும் திட்டத்தையும் பங்குதாரர்கள் அங்கீகரித்தனர்.

நீதிமன்றத்தின் உத்தரவிலிருந்து தப்புவதற்கு அது உதவக்கூடும் என்று கூறப்படுகிறது.

மஸ்க்கிற்கு மிதமிஞ்சிய சம்பளம் கொடுக்கப்படுவதற்கு எதிராகச் சிறிய முதலீட்டாளர் ஒருவர் வழக்குத் தொடுத்திருந்தார். சம்பளம் நியாயமற்றது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

நீதிமன்றம் பங்குதாரர்களின் அண்மைய வாக்களிப்பை ஏற்றுக் கொள்ளுமா என்பது தெரியவில்லை என்று சட்ட நிபுணர்கள் கூறுகின்றனர்.


## பயனீட்டாளர்களை கவர எக்ஸ் தளத்தில் மாற்றம்

ட்விட்டர் என்று முன்னர் அழைக்கப்பட்ட எக்ஸ் சமூக தளத்தில் இப்போது பயனீட்டாளர்கள் பதிவிடும் விருப்பக்குறிகளை மற்றவர்கள் பார்க்க முடியாது.

பயனீட்டாளர்களைப் பாதுகாத்து அவர்களின் ஈடுபாட்டை அதிகரிக்க இந்த முயற்சி எடுக்கப்படுவதாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

முன்னர் பயனீட்டாளர்கள் பதிவிடும் விருப்பக்குறிகளைக் காட்டும் பகுதி ஒன்று இருந்தது. அவர்களின் எக்ஸ் பக்கத்தைப் பின்தொடரும் அனைவரும் அவர்களின் விருப்பக் குறிகளைக் காணலாம்.

அதன் வழி ஒருவரின் விருப்பங்கள் யாவை என்பதை மற்றவர்கள் அறிந்துகொள்ளலாம். இனி அதற்கு வாய்ப்பில்லை.



புதிய மாற்றத்துக்குப் பின்னர் விருப்பக்குறிகளைப் பதிவிடும் போக்கு அதிகரித்துள்ளதாக எக்ஸ் தளத்தின் தலைமை நிர்வாக அதிகாரி இலோன் மஸ்க் கூறினார்.

பயனீட்டாளர்கள் தாங்கள் விரும்பும் பதிவுகளுக்குப் பிரச்சினை இல்லாமல் விருப்பக்குறியைச் செலுத்த அனுமதிப்பது முக்கியம் என்று அவர் சமூக ஊடகப் பதிவு ஒன்றில் குறிப்பிட்டார்.

# தொடரும் தாக்குதல்: காசாவில் விரைவில் போர் நிறுத்தத்திற்கு வாய்ப்புகள் குறைவு



## அமெரிக்கா அவநம்பிக்கை: லெபனானிலும் பதற்றம் அதிகரிப்பு

இஸ்ரேலிய இராணுவம் காசாவின் தெற்கு நகரான ரபாவில் தாக்குதல்களை தீவிரப்படுத்தி இருக்கும் நிலையில் அமெரிக்கா முன்வைத்த போர் நிறுத்தத் திட்டம் தொடர்பான எதிர்பார்ப்பு குறைந்து வருகிறது.

பாதுகாப்புச் சபையால் உறுதி அளிக்கப்பட்ட மூன்று கட்ட போர் நிறுத்தத் திட்டத்தை முன்னெடுக்கும் இராஜதந்திர முயற்சிகள் இடம்பெறும் நிலையில், எகிப்து எல்லையை ஒட்டிய ரபாவில் இஸ்ரேல் கடந்த இரு தினங்களாக தாக்குதல்களை அதிகரித்துள்ளது.

அந்த நகர வீதிகளில் இஸ்ரேலிய தரைப்படை மற்றும் பலஸ்தீன போராளிகள் இடையே மோதல் வெடித்திருப்பதோடு, அங்கு ஹெலிகல் மூலம் சூடு நடத்தும் இஸ்ரேல் போர் விமானங்கள், ஆளில்லா விமானங்கள், போர்க் கப்பல்கள் மற்றும் பீரங்கிகள் மூலம் உக்கிர தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இதனால் அங்கு அடைக்கலம் பெற்றிருந்த மக்கள் மீண்டும் ஒருமுறை வெளியேறி வருவதோடு உயிர்ச்சேதங்களும் பதிவாகி உள்ளன.

காசாவின் மற்றப் பகுதிகளிலும் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்கின்றன. வடக்கில் காசா நகரில் உள்ள வீடு ஒன்றின் மீது கடந்த வியாழக்கிழமை (13) இடம்பெற்ற வான் தாக்குதலில் ஒரு குழந்தை உட்பட ஆறு பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன உத்தியோகபூர்வ செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது.

காசா நகரின் நபெக் வீதியில் இருக்கும் வீட்டின் மீது இரு ஏவுகணைகள் கொண்டு தாக்குதல் நடத்தியதாக அங்குள்ள வபா செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

காசா நகரில் குடியிருப்புப் பகுதி மீது இடம்பெற்ற மற்றொரு தாக்குதலில் மூன்று பெண்கள் மற்றும் ஒரு சிறுவர் ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர். காசா நகரில் மேற்கில் உள்ள ஹைதர் சதுக்கத்திற்கு அருகில் பக்ரி குடும்பத்திற்குச் சொந்தமாக வீடு ஒன்றின் மீதே தாக்குதல் இடம்பெற்றிருப்பதாக உள்ளூர் மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தெற்கு நகரான கான் யூனிஸின் துறைமுகப் பகுதியில் இஸ்ரேலிய போர் விமானங்கள் வீசிய குண்டு மழையில் ஒரு பலஸ்தீனர் கொல்லப்பட்டிருப்பதாக அல் ஜசீரா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த எட்டு மாதங்களுக்கு மேலாக காசாவில் இஸ்ரேல் நடத்தி வரும் இடைவிடாத தாக்குதல்களில் 37,200க்கும் அதிமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

### 'நம்பிக்கை இழக்கவில்லை'

காசாவில் போர் தொடர்ந்து தீவிரமாக நீடித்து வரும் நிலையில் கூடிய விரைவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டும் வாய்ப்பு குறைவாக இருப்பதாக அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

இத்தாலியில் ஜி7 மாநாட்டில் பங்கேற்றிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இன்னும் 'நம்பிக்கை இழக்கவில்லை' என்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

முன்வைக்கப்பட்டிருக்கும் போர் நிறுத்தத் திட்டத்திற்கு, ஹமாஸ் அமைப்பு திருத்தங்களுடன் பதிலளித்திருந்தது. அது நிரந்தர போர் நிறுத்தம் மற்றும் காசாவில் இருந்து இஸ்ரேலிய படைகள் வாபஸ் பெறுவதை உறுதி செய்வதாகவே ஹமாஸின் பதில் இருப்பதாக கூறப்படுகிறது.

இந்தப் போர் நிறுத்தத் திட்டத்தை இஸ்ரேல் செயற்படுத்துவது பற்றி ஹமாஸ் அமைப்பு சந்தேகத்தையும் வெளியிட்டு வருகிறது. இந்தத் திட்டத்திற்கு இஸ்ரேல் இணங்கியதாக அமெரிக்கா கூறுகின்றபோதும் இஸ்ரேல் தரப்பில் இருந்து இன்னும் உறுதியான பதில் அளிக்கப்படவில்லை.

இந்நிலையில் போர் நிறுத்தம் ஒன்று கூடிய விரைவில் ஏற்படுமா என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, பைடன் 'இல்லை' என்றே பதிலளித்தார்.

இந்தப் போர் காசாவில் உள்ள 80 வீதத்திற்கும் அதிகமான மக்களை தமது வீடுகளை விட்டு வெளியேற்றி இருப்பதோடு நகரங்கள் முற்றாக சின்னபின்னமாக்கப்பட்டுள்ளன. இஸ்ரேலின் முற்றுகைக்கு மத்தியில் அங்கு பட்டினி பாதிப்பு அதிகரித்து வருகிறது.

'எமக்கு தீர்வொன்று வேண்டும். நாம் எமது வீடுகளுக்கு திரும்ப வேண்டும். இந்த வாழ்க்கையில் களைத்துவிட்டோம்' என்று மத்திய காசா நகரான டெயர் அல் பலாவில் இடம்பெயர்ந்து கூடாரத்தில் தங்கி இருக்கும் சலாமா அபூவல் கும்புஸ் குறிப்பிட்டார்.



காசாவில் பிடிக்கப்பட்டிருக்கும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு அவர்களின் குடும்பங்களில் இருந்து இஸ்ரேலிய அரசுக்கு அழுத்தங்கள் அதிகரித்துள்ளன. ஹமாஸுடன் உடன்பாடு ஒன்றுக்கு வருவதற்கு அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்தப் போர் வெடிக்கக் காரணமான கடந்த ஒக்டோபர் 7 அன்று இடம்பெற்ற இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலின்போது சுமார் 250 பேர் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டனர். கடந்த நவம்பரில் ஒரு வாரம் நீடித்த போர் நிறுத்தத்தின்போது 100 பணயக்கைதிகள் வரை விடுவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து சுமார் 80 பேர் பயணக் கைதிகளாக இருப்பதோடு 40 உயிரிழந்த பணயக்கைதிகளின் சடலங்களும் இருப்பதாக நம்பப்படுகிறது.

எனினும் காசாவில் உள்ள பணயக் கைதிகள் பற்றி யாருக்கு தெரியாது என்று ஹமாஸ் பேச்சாளர் மற்றும் அந்த அமைப்பின் அரசியல் பிரிவு உறுப்பினரான ஒசாமா ஹம்தான் அமெரிக்காவின் சி.என்.என். தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

போர் வெடிப்பதற்கு காரணமான ஒக்டோபர் 7 தாக்குதலை நடத்தியதற்கு ஹமாஸ் வருந்துகிறதா என்று இதன்போது ஹம்தானிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர், 'ஆக்கிரமிப்புக்கான எதிர்வினையாகவே அது இருந்தது' என்று பதிலளித்தார்.

### பஞ்சம் அதிகரிப்பு

இதேவேளை ஊட்டச்சத்து குறைபாட்டால் காசாவில் 12 வயது சிறுவன் ஒருவன் நேற்று மரணித்தாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. முஸ்தபா ஹிஜாசி என்ற அந்த சிறுவன் டெயர் அல் பலாஹ்வில் உள்ள அல் அக்ஸா தியாகிகள் மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார்.

காசா பகுதியில் ஊட்டச்சத்து குறைபாட்டுடன் தொடர்புபட்டு உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 40 ஆக அதிகரித்திருப்பதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடக்கு காசாவில் பஞ்சம் அதிகரித்திருப்பதாகவும் 200,000இற்கும் அதிகமான பலஸ்தீன சிறுவர்கள் இடையே ஊட்டச்சத்து குறைபாட்டுக்கான அறிகுறிகள் தெரிவதாகவும் கமால் அத்வான் மருத்துவமனையின் பணிப்பாளர் டொக்டர் ஹொசான் அபூ சபியா குறிப்பிட்டுள்ளார்.

அல் அரபியா தொலைக்காட்சிக்குப் பேசிய அவர், காசா மனிதாபிமான நெருக்கடி ஒன்றை எதிர்கொண்டிருப்பதாக எச்சரித்தார். 'மாவை தவிர எந்த உணவுப் பொருளும் வடக்கு காசாவில் இல்லை. பஞ்சத்தின் அச்சுறுத்தலை தீவிரமாக எடுத்துக் கொள்ளுமாறு அனைத்து சர்வதேச நிறுவனங்களுக்கும் நான் ஒரு துயர அழைப்பை விடுக்கிறேன்' என்று அவர் குறிப்பிட்டார்.

காசாவில் ஏற்கனவே உணவு, மருந்து, எரிபொருளுக்கு தட்டுப்பாடு இருக்கும் நிலையில் கடந்த மே ஆரம்பத்தில் எகிப்துடனான ரபா எல்லைக் கடவையை இஸ்ரேலியப் படை கைப்பற்றியதை அடுத்து நிலைமை மோசடைந்துள்ளது. இந்த எல்லைக் கடவை காசாவுக்கான உதவிகள் வரும் வாயிலாக இருந்த நிலையில், அது தற்போது மூடப்பட்டுள்ளது.

'இஸ்ரேல் உதவிகளுக்கான கட்டுப்பாடுகளை தளர்த்தி, தாக்குதல்களை நிறுத்தி மற்றும் முக்கிய சேவைகளை மீள ஆரம்பிக்காத பட்சத்தில் விரைவில் காசாவில் பஞ்சம் ஏற்படும்' என்று நிவாரண அதிகாரிகள் மற்றும் சுகாதார நிபுணர்கள் எச்சரித்து வருகின்றனர்.

பொரும்பாலான காசா குடியிருப்பாளர்கள் 'கொடிய அளவில் பட்டினி மற்றும் பஞ்சம் போன்ற நிலையை எதிர்கொண்டிருப்பதாகவும்' உலக சுகாதார அமைப்பு அண்மையில் எச்சரித்திருந்தது.

### முழு அளவில் போர் அச்சுறுத்தல்

காசா போர் பிராந்தியத்தில் பதற்றத்தை அதிகரித்திருக்கும் சூழலில் இஸ்ரேல் மற்றும் லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்புக்கு இடையே அடிக்கடி மோதலைத் தூண்டி வருகிறது. ஹிஸ்புல்லா மூத்த தளபதி ஒருவர் இஸ்ரேலின் தாக்குதலில் கொல்லப்பட்ட நிலையில் அந்தப் போராட்ட அமைப்பு பதில் நடவடிக்கையாக நேற்றும் இஸ்ரேல் மீது சரமாரி ரொக்கெட் மற்றும் ஆளில்ல விமானத் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இது முழு அளவில் போர் ஒன்றாக வெடிக்கும் அச்சுறுத்தலை அதிகரித்துள்ளது.

தெற்கு லெபனானில் இருந்து வடக்கு இஸ்ரேலை நோக்கி ஏவுகணைகள் வீசப்பட்டு வருவதாகவும் எல்லை நகரான கிர்யாத் ஷமோனின் சுற்றுப்புற பகுதிகள் இலக்காகி வருவதாகவும் இஸ்ரேலிய அவசர சேவைகள் பிரிவு நேற்று தெரிவித்தது.

வடக்கு காசாவில் எச்சரிக்கை சைரன் ஒலி எழுப்பப்பட்டிருப்பதோடு பொருட் சேதங்கள் பதிவாகி இருப்பதாகவும் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று அவசர சேவை பிரிவு குறிப்பிட்டது.

இஸ்ரேல் மீது லெபனானில் இருந்து தொடர்ந்து மூன்றாவது நாளாகவே ரொக்கெட் குண்டுகள் வீசப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக தெற்கு லெபனானின் டைரே மாவட்டத்தில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல் ஒன்றில் பெண் ஒருவர் கொல்லப்பட்டு மேலும் ஏழு பேர் காயமடைந்ததாக லெபனான் தேசிய செய்தி நிறுவனம் குறிப்பிட்டது.

இதன்போது ஜென்னத் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றே தாக்கப்பட்டிருப்பதாக அந்த செய்தி கூறுகிறது.

பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக யெமன் ஹூத்தி கிளர்ச்சியாளர்களின் செங்கடலில் செல்லும் கப்பல்கள் மீதான தாக்குதல்கள் இன்னும் நிறுத்தப்படவில்லை. உக்ரைனியருக்கு சொந்தமான சரக்குக் கப்பல் மற்றும் மேலும் இரு கப்பல்கள் மீது கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதில் ஒரு கப்பலில் சேதங்கள் ஏற்பட்டு தீ பரவி இருப்பதோடு ஒருவர் காயமடைந்திருப்பதாக அமெரிக்க மத்திய கட்டளையகம் குறிப்பிட்டுள்ளது.

# கம்பன் விழா நேற்று கொழும்பில் கோலாகலமாக ஆரம்பம்













இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜுன் மாதம் 15ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.